திருவள்ளுவர் ஆண்டு 2035

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 98 பகுதி : 12 டிசம்பர் 2004

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

டிசம்பர்-0

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி | |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

தொகுதி : 98
பகுதி : 12
டிசம்பர் 2004

(தோற்றம் 1903)

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2035



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

செயலர்

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்., செயலர்

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்


இதழ்மணம் ... 419

அருளிச்செயல் கவிதைக்கோட்பாடுகள்
பேராசிரியர் முனைவர்இரா.அரங்கராசன் ... 421

செம்மையால் தணிந்த சிந்தை
முனைவர் சுப.அண்ணாமலை ... 426

கண்ணகி வழிபாட்டினால் மாரி
வந்ததுஉண்மையா?
பேராசிரியர் கதிர் மகாதேவன் ... 436

அ.சீனிவாசராகவன்-வெள்ளைப்பறவை
ஒரு இலக்கியநயம் பாராட்டுதல்
கி.நாச்சிமுத்து ... 449

# இதழ்மணம்

பேராசிரியர் அரங்கராசன் அவர்களின் அருளிச்செயல் கவிதைக் கோட்பாடுகள் ஐந்தாம்பகுதி இவ்விதழில் இடம் பெறுகிறது ,திருவாய் மொழி அருளிச்செயல் மட்டுமல்ல அது ஓர் இலக்கியம் பக்தி இலக்கியங்களுக்கு ஓர் இலக்கணம் என்னும் நுட்பத்தைப்பேராசிரியர் திறனாய்வு செய்திருக்கிறார்,

காருபரமண்யரான நம்பிள்ளையின் வியாக்கியான உட்கிடக்கையை எடுத்துரைத்திருக்கும் திட்பம் கட்டுரை முழுவதும் ஒளிவீசுகிறது இலக்கியச் சுவைஞர்க்குக்கட்டுரை ஓர் இனிய விருந்து பல முறை படித்து இன்புறலாம்

பேராசிரியர் சுப,அண்ணாமலை அவர்கள் எழுதும் பெரிய புராணக்காப்பிய ஒருமை என்னும் தொடரில் செம்மையால் தணிந்தசிந்தை என்னும் மூன்றாம் பகுதிஇவ்விதழில் இடம் பெறுகிறது பெரியபுராணத்தின் உள்ளீடு இக்கட்டுரையில் விரிவாகச் சிந்திக்கப்படுகிறது பெரியபுராணத்தில் அடியார்களின் வைப்பு முறைக்குரிய காரணங்களை ஆசிரியர் தெளிவுபடுத்தும் நுட்பம் கற்போர் உள்ளம் கொள்ளத்தக்கது பெரிய புராணக்குறிக்கோள் ஆசிரியரால் நிலைநிறுத்தப்பெறுவதும் சிந்திக்கற்பாலது,

பேராசிரியர் கதிர் மகாதேவன் அவர்கள் கண்ணகி வழிபாட்டினால் மாரி வந்தது உண்மையா என்னும் சிலப்பதிகாரம் குறித்த கட்டுரைத் தொடரைத் தொடங்கி எழுதுகிறார்கள் சிலப்பதிகாரம் கண்ணகி கோவலன் வரலாறு மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுலகத்தின் பண்பாட்டு நாகரிக வரலாறு என்பதைப்பேராசிரியர் கூறும் நுட்பம் அறியதற்குரியது. தமிழ் உலகம் விழுமியங்களைப் போற்றத்தலைப்பட வேண்டும் என்னும் கருத்தாய்வையும் ஆசிரியர் குறிப்பிடுவது எண்ணற்பாலதாகும்,

கேரளப்பல்கலைக் கழகப்பேராசிரியர் கி. நாச்சிமுத்து அவர்கள் திரு அசீரா என்று அன்புடன் அறுபதுகளில் போற்றி அழைக்கப்பட்ட பேராசிரியர் அ.சீனிவாசராகவன் அவர்களுடைய இலக்கியப்பெருவாழ்வை நினைவுகூறும் வகையில் " வெள்ளைப்பறவை ஒரு நயம் பாராட்டுதல்" என்னும் கட்டுரையை இவ்விதழில் எழுதுகிறார்கள் பேராசிரியர் அ.சீ.ரா அவர்களின், படைப்பின் தனித்தன்மையை எடுத்துப் போற்றியுள்ளார்கள் இந்தத்தலைமுறை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பேராசிரியர் அ.சீ.ரா வின் மும்மொழிப் புல்மையும் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டுமொழிகளிலும் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு சிந்தித்து வளர்த்தற்குரியதாகும்

கேரளப் பல்கலைக்கழகப்பேராசிரியர் கி. நாச்சிமுத்து அவர்கள் ரூபாய் ஆயிரம் அளித்துச் செந்தமிழ்ப்புரவலர் ஆகிறார்கள் அவர்களையும் அவருடைய மாணவர்கள் குடும்பத்தார் அனைவரையும் தமிழ்ச்சங்கம் வாழ்த்துகிறது. தியாகராசர் கல்லூரி பொருளியல் துறைத்தலைவராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற பேராசிரியர் வேணுகோபாலன் அவர்களும் அண்ணாமலைப்பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு.அ.ஐம்புலிங்கம் அவர்களும் ஆண்டுக் கட்டணம் அளித்துள்ளார்கள் அவர்களுக்கும் உளம்நிறைந்த நன்றி

# அருளிச்செயல் கவிதைக் கோட்பாடுகள் (5)

பேராசிரியர் முனைவர் இரா. அரங்கராஜன்

*இலக்கணம் இயைந்தது ஏன்?*

ஆழ்வாருக்கு எல்லாம் வல்லவனாயும் எங்கும் நிரம்பியவனாயும் யாவற்றையும் அறியும் திறனுடையோனாயுமுள்ள பரம்பொருளின் இயற்கையின்னருளால் பரமபக்தி முகிழ்த்து மலர்ந்து மணங்கமழ்ந்தது.

அதனால் அவர்பெற்ற இறைநுகர்வு உள்ளடங்காது புறம்பே ஓசிந்தது. புறம்பொசிந்த சொற்களின் ஈட்டம் இனிய கவிதைகளாக விழுந்தன. இதற்குக் காரணத்தைத் திருவாய்மொழிப் பேருரையாளர் தம் உரைப்பாயிரத்தில் விரிவாக ஆய்வு செய்துள்ளார்.

இறை அனுபவத்தில் சிலபோழ்து பிரிவு நிகழ்ந்து ஆழ்வார் மனம் கலங்கிச் சொன்ன பேச்சுக்களும் பாவிலக்கணங்கள் தாமாகவே வாய்க்கப் பெற்றன என்பது அவருடைய கோட்பாடு.

"நிறைக்கொள் அந்தாதி" (திருவாய்மொழி 5-3-11) என்ற தொடரை விளக்கும் போது,

"இவர் முன்னடி தோற்றாதே மடலூரச் செய்தேயும் பிரபந்தமானது எழுத்தும் சொல்லும் பொருளும் அடியும் தொடையும் பாவும் இசையும் தாளமும் அந்தாதியும் சேர விழுந்தபடி ... .... சோக வேகத்தாலே சொல்லச் செய்தேயும் நான்முகக் கடவுளின் அருளாலே வான்மீகியின் வாக்கில் இலக்கணங்கள் யாவும் கூட்டி நின்றதுபோல் ஆழ்வாருடைய சோகச் சொற்களிலும் இலக்கணங்கள் சேரவிழத் தட்டியில்லை"என்று குறிப்பிட்டிருக்கிறார் உரைவேந்தர் நம்பிள்ளை இத்தகைய அரிய நிலையைத்தான் உள்ளொன்றிய நிலை பற்றி விரிவாக ஆய்வு நிகழ்த்திய அண்டர்ஹில் அம்மையார்[Automatic Composition]. [ உள்கிளர்ந்த யாப்பு]என்று குறிப்பிட்டு மேலும் அந்நிலையில் சொற்களும் தொடர்களும் கருத்துக்களும் தாமாகவே ஒரு கட்டுக்கோப்பான வடிவ அமைப்புக்குள் அடங்கி விடுகின்றன என்றும் ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார்.ஆழ்வார் திருவாய்மொழியில் பெருந்துயரெய்தி

அலமாப்படைந்த இடங்கள் பல உள. அவ்வளவு துயர் எய்தினும் அவற்றையும் ஆழ்வார் கவிதைகளாக வெளிப்படுத்தியுள்ளார்கள்.

"அன்று இவர் வியசனப்பட்டாரேயாகிலும் இவர் அருளிச் செய்த பிரபந்தங்கள் உலகிற்குத் தண்ணீர்ப்பந்தலாயிற்று" என்பது நம்பிள்ளையின் முடிப்புரை.

எனவே, ஆழ்வாருடைய மதிநலத்தால் விளைந்த இன்ப துன்ப உணர்வுகள் இறையருள் தமிழ் நூல்களாக மலர்ந்தன. இஃதே நம்பிள்ளையின் கோட்பாடாகும்.

ஆயினும் இலக்கணங்கள் யாவும் ஒருசேர அமையப்பெற்ற எல்லா நூல்களும் இன்கவிகள் ஆகமாட்டா. இலக்கணங்கள் இயைவதோடு சொற்களின் விழுக்காட்டில் ஓர் இனிமை இழைந்து ஓட வேண்டும்; ஆழ்வார் பாசுரங்களில் இத்தகைய இனிமையை உரையாசிரியர் நம்பிள்ளை காண்கிறார்.

"இலக்கணம் கூடியதாய் அது கிடக்கச் செய்தேயும்
சொல்லின் இனிமைதானே உள்ளம் கவர்கின்றதான இனிய கவிகள்" (7-9-3 ஈடு)

என்று ஆழ்வார் பாடல்களைப் பற்றிய தம்முடைய மதிப்பீட்டைக் குறித்து வைத்துள்ளனார்.

திருவாய்மொழி பற்றிய மேலும் சில கருத்துக்களைப் பரந்து கிடக்கும் ஈட்டில் ஆங்காங்குக் காணமுடிகிறது.

அவையாவன:

1. ஆழ்வாருடைய திருவாக்கிலே புக்கு.... நாம் தூயராய் அடிமை செய்ய வேண்டும் என்று அச்சொற்கள் தாமாகவே 'என்னைக் கொள்க; என்னைக் கொள்க' என்று வந்து அடிமை செய்தன. (6-8-11 ஈடு)

2. தண்டமிழ்ச் சொற்கள் ஆழ்வார் திருவாக்கிலே புகுந்துபுறப்பட்டுத் தெய்வத் தமிழ்ச் சொற்களாகப் பெற்றன. (6-4-11 ஈடு)

3. ஆழ்வார் நூறுநூறாகப் பிரிவுகள் அமையத் திருவாய் மொழி செய்தது கற்பார்க்கு எளிதாக இருப்பதற்காக "பத்துப்பாட்டு ஒரு திருவாய் மொழியாய் பத்துத் திருவாய்மொழி ஒரு பத்தாய் இப்படிப் பத்துப் பத்தான ஆயிரம்" (2-3-11 ஈடு)

4. திருவாய் மொழியாகிய அருளிச்செயல் ஓர் இலக்கியம் இதைக்கொண்டு பத்திமை நூல்களுக்கு இலக்கணம் காணவேண்டும் "பின்புள்ளார்க்கும் இதுகொண்டு இலக்கணம் கட்டலாம்படியாயிற்று இவையிருப்பது" என்பர் நம்பிள்ளை (10-6-4 ஈடு)

5. திருவாய் மொழிக்கு ஆழ்வார் சூட்டிய பெயர் 'அவாவிலந்தாதி' என்பதாகும். (10-10-முன்னுரை ஈ.டு)

*பக்தி நூல் கோட்பாடுகள்*

ஆழ்வார்க்குப் பின்னர்த் தோன்றிய தமிழ் நூல்களை நம்பிள்ளை நன்கு அறிந்து வைத்திருந்தார். அவற்றிலிருந்து மேற்கோள்களாகச் சில பகுதிகளையும் எடுத்து ஆண்டிருக்கிறார். ஆயினும் அவற்றின் கண்ணேயே முழுப் பொழுதையும் செலவழிக்காது திருவாய்மொழியைக் கற்றே வாழ்ந்ததால் ஆழ்வாருடைய உள்ளக்கிடக்கைகள் அவருக்கு நன்கு தெளிவாயின.

"ஆழ்வாருக்குப் பிறகு ஒரு நூறாயிரம் கவிகள் போரும்
உண்டாயிற்று; அவர்கள் கவிகளோடு கடலோசை
யோடு வாசியற்று அவற்றை விட்டு இவற்றைப்பற்றித்
துவளுகைக்கு அடி - இவருடைய பக்தி அபிநிவேசம்
வழிந்து புறப்பட்ட சொல்லாகையிறே" (10-10-11 ஈடு)
என்று மனமுருகிக் கூறுகிறார்.

ஆதலால் ஆழ்வாரை நன்கறிந்த பேராசிரியான நம்பிள்ளை காட்டுகின்ற பக்தியிலக்கியக் கோட்பாடுகள் கற்பதற்குத் தகுதிபெறுகின்றன. இனி, அவற்றை முறையாகக் காண்போம்.

கவிக்கு உள்ளுறை அழகுணர்ச்சியே,

ஆழ்வாருக்கு இறையருள் நுகர்ச்சியை முதல் முன்னம் எழுப்பியது இறைமைப் பண்புகளே என்பது நம்பிள்ளையின் தேர்ந்த கருத்தாகும். "உயர்வற உயர்நலம் உடையவன்" என்று ஆழ்வாரைச் சொல்லுவித்தது இறைவனுடைய பண்பு நலன்களே.

"இவர்தாம் முற்படக் குணங்களிலே இழிவது ஏன் என்னில், தாம் அகப்பட்ட துறை அதுவாகையாலே. இவரைக் குணத்தையிட்டாயிற்று வணக்குவித்தது" என்பர் நம்பிள்ளை (குணம் - பண்பு வில்லின் நாண் கயிறு)

'தொழுது எழு என் மனனே' என்று வணங்கிய ஆழ்வாரைக் கவிபாடும் படி தூண்டியது யாது? என்பதையும் ஓரிடத்தில் நம்பிள்ளை ஆராய்ந்துள்ளார். அவ்வாராய்ச்சிக்கு அடிப்படையாக ஆழ்வாரின் பாடல் அடிகளையே கொள்கிறார்.

"இன்தமிழ் பாடிய ஈசனை
ஆதியாய் நின்ற என் சோதியை" (7-9-1)
என்பது ஆழ்வாரின் அனுபவக் குரல்.

"ஈசனால் செய்யப்பட்டதால் திருவாய் மொழித்தமிழ் இனிமை பெற்றது; ஆழ்வார் கவிபாடுகைக்கு ஆதியாக நின்றான் அவனே" என்பது பிள்ளையின் விளக்கம்.

அதைத் தொடர்ந்து நம்பிள்ளை தரும் விளக்கம்:

"பிடாத்தை விழவிட்டுத் தன் வடிவழகைக் காட்டினான்
திருத்திரை எடுத்தால் கூப்பிடுமாபோலே கூப்பிட்டேன்
அது கவியாய்த் தலைக்கட்டிற்று. வடிவழகைக் காட்டி
யாயிற்றுக் கவிக்கு உள்ளுறை கொடுத்தது"

(பிடாம்-முகத்தை மறைக்கும் முக்காடு; திருத்திரை எடுத்தால்-திருக்கோயிலில் திரையை விலக்கி இறைத்திருமேனியை ஒளிவிளக்கேற்றிக் காட்டினால்; கூப்பிடுதல்-ஆரவாரம் செய்தல்)

இதனால், நம்பிள்ளை முருகுணர்ச்சியே கவிதையின் தூண்டுகோல் என்ற அரிய கொள்கையை வெளிப்படுத்துகிறார்.

### *விருப்பும், வெறுப்பும்:*

ஆழ்வார்க்கு இன்ப துன்பங்கள் ஏற்பட்டு அவற்றால் விருப்பு வெறுப்புகள் ஏற்படுவதாக நூல் கொண்டு அறியப்படுகிறது. அருளாளரான ஆழ்வார்க்கு விருப்புவெறுப்புகள் ஏன்? உலகியற் செருக்கால் வருவனவே ஒதுக்கற்குரியவை. இறை அனுபவத்தால் வருவனயாவும் ஏற்கத்தக்கனவே. அதனால் ஆழ்வார் இறையுணர்ச்சியில்லாதாரை நிந்திப்பதும் கொள்ளத்தக்கதேயாம். பிராட்டியைக் கண்டு வந்த பெருமகிழ்ச்சியால் மதுவனத்தை வானர வீரர்கள் அழித்ததை உரையாசிரியர் இவ்விடத்தில் எடுத்துக் காட்டுகின்றார்.

### *இலக்கிய வேட்கை:*

திருவாய்மொழி அனுபவிக்க வேண்டிய ஒரு நூல்; அதனை ஜப, பாராயணங்களுக்கு ஒதுக்குவது ஏற்புடையதன்று. திருவாய்மொழியை அனுபவிக்க இலக்கிய விடாய் தேவை. அறிவினும் உணர்ச்சிக்கே முதன்மை கொடுத்து நுகர வேண்டிய காதல் இலக்கியம் அது. நுகர்தற்குரிய நூலில் தருக்க வாதங்கள் செய்வது செவ்வையன்று. இளநீரைப்பருக வேண்டிய திருக்க; அது எவ்வாறு உட்புக்கது என்று ஆராய்வதா? தேங்காய்க்கு இளநீர் புக்க வழி ஆராய்ந்தன்றிறே விடாயத்தவன் இளநீர் குடிப்பது?" என்று கேட்கிறார் நட்பிள்ளை. இளநீரைக் குடிப்பவன் இலக்கியச் சுவைஞன்; புக்கவழியை ஆராய்பவன் வெறும் அறிவியலறிஞன் இலக்கியச் சுவைஞர்களே திருவாய்மொழியை அனுபவிக்க முடியும்.

திருக்கண்ணபுரப்பதிகத்தில், "வெள்ளி ஏய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்" (9-10-2) என்று ஆழ்வார் வருணிக்கும்போது வெள்ளியால் மதிளை இயற்றுவாருண்டோ? அப்படிக் கண்டிலோம் என்றெல்லாம் வினாக்களை எழுப்பிக் கொண்டிருந்தால், கவிதையின் உயர்வு நவிற்சியில் புதையுண்டிருக்கும் சுவையை இழந்துவிட நேரிடும். கவிதைக்கண் பெற்றிருப்பார்க்குப் பொன்மதிளாகவும் தோற்றும் என்பது பிள்ளையின் கருத்து.

"பிரத்யக்ஷிக்கின்றிலோம் (கட்கூடாகக் கண்டிலோம்)
ஆகிலும் ப்ரேமாதிசயத்தாலே (அன்பின் மிகுதியாலே)
விலட்சணமாய்த் தோன்றுமிறே"

என்று உரையாசிரியர் கருத்துக் கூறுவர். எனவே கவிதை அனுபவத்துக்கு "பிரேமாதிசயம் (உயர்ந்த பிரேமை)" தேவை என்பது நம்பிள்ளைதரும் கோட்பாடகும்.

# 3. செம்மையால் தணிந்த சிந்தை

*முனைவர் சுப.அண்ணாமலை*

பெரியபுராணம் மூன்று பகுதிகளை உடையது. அவை தொடக்கப் பகுதி, மையப்பகுதி, இறுதிப்பகுதி என்பவை. இக்காப்பியம், முதனூலாகிய திருத்தொண்டத் தொகையை அடியொற்றித் திருத்தொண்டர்களின் வரலாற்றை வரிசைப்படுத்துவது ஆதலின், முதனூல் பாடிய நம்பியாரூரரின் வரலாற்றில், அவர் திருவாரூரில் தேவாசிரிய மண்டபத்தில் தொண்டர் கூட்டத்தை வணங்கி, அம் முதனூலைப் பாடியதுவரை உள்ள பகுதியைச் சேக்கிழார் 'தடுத்தாட் கொண்ட புராணம்' என அமைக்கின்றார். இது தொடக்கப்பகுதி.

அடுத்துத் திருத்தொண்டத்தொகையின் பதினொரு பாடல்களிலும் குறிக்கப்பெறும் 71 அடியார்களின் வரலாறும், அவ்வரிசை முறையே விரித்துக்கூறும் மையப்பகுதி அமைகிறது. அதில் ஏயர்கோன் கலிக்காம நாயனார் வரலாற்றிலும் கழறிற்றறிவார் வரலாற்றிலும் நம்பியாரூரர் தொடர்புறுவதால் அவர் வரலாற்றில் பெரும்பகுதி அவ்வீரிடத்தும் கூறப்பெறுகின்றது. இது மையப்பகுதி.

திருத்தொண்டத் தொகை பாடுதலாகிய இறைபணியை நிறைவு செய்து, நிறைவாழ்வு வாழ்ந்து நம்பியாரூரர் கயிலாயம் சென்றமை வெள்ளானைச் சருக்கத்தில் கூறப்படுகின்றது. இது இறுதிப்பகுதி. ஆதலின் நாம் மேற்கொண்ட வைப்புமுறை ஆய்வில் முதலில் இடம் பெறுவோர் திருத்தொண்டத்தொகையில் முதலில் கூறப்பட்ட தில்லைவாழந்தணரே, நம்பியாரூரர் வரலாறு இறுதியிலேயே இடம்பெற வேண்டும்.

காப்பியத்தின் மையப் பகுதியில் முதற்கண் போற்றப் பெறுவோர் தில்லை வாழ் அந்தணர். இவர்கள் தொகையடியார் என்பதை, “மும்மை ஆயிரவர்” என்னும் சேக்கிழாரின் தொகைக்குறிப்புப் புலப்படுத்தும். அவர்களிடத்து மேலோங்கிக் காணப்பட்ட பண்பினை மையப்படுத்தி இவ்வரலாற்றைக் கூறும் கவிஞர், அவர்களுள் ஒருவரையும் தனிப்பட்ட முறையில் நோக்காமல், தொகுதியாகக் கூறுவது, சமுதாய நோக்கில் அருச்சகர் சமூகம்

கொண்டிருந்த மனநிலையையும், அவர்கள் செய்த பணியின் 'சமுதாயப் பயனையும்' அவர் கணித்துக் கூறுகின்றமையைக் காட்டும்.

சமுதாயத்தாரின் வழிபாட்டிடம் திருக்கோயில் இவ்வந்தணர்கள் தில்லைக் கோயிலில் 'அகம்படித்தொண்டை' மேற்கொண்டு, சரியைத் தொண்டு கிரியை வழிபாடு ஆகியவற்றை, இறைவனிடம் அன்பு பூண்ட மனத்துடன் செய்தனர்; அதனை நாள்தவறாமல், ஒன்றிய மனத்தோடு செய்தனர் என்பதைச் சேக்கிழார்,

"நிருத்தனுக் குரிய தொண்டாம்
பேற்றினார்.... பேணி வாழும்
ஆற்றினார்; பெருகும் அன்பால் அடித்தவம் புரிந்து
வாழ்வார்"

என்று குறிப்பிடுகின்றார்.

அவர்கள் இல்லற வாழ்வினராயினும் செல்வத்திலும் ஏனைய வசதியிலும் நாட்டம் கொள்ளவில்லை. ஆடை, அணிகலங்களைச் சேர்க்கவில்லை. திருநீறே செல்வம் எனக்கொண்டனர். இறைவனிடம் எதுவும் வேண்டவில்லை. அவனிடம் அன்புபெருகவே வேண்டினர் சேக்கிழார் அவர்களின் பொதுப்பண்பினை,

"செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வ வேதியர்கள்"

என்னும் தொடரில் கணித்துரைக்கின்றார். மக்கள் வழிபடும் தலமாக உள்ள திருக்கோயிலில் மக்கள் மனத்தின் ஆழத்தில் எதை வேண்டுகின்றனரோ, அதை வழங்க வேண்டுமன்றோ? சிக்கல்களில் மோதுண்டு, ஆசை, எதிர்பார்ப்பு, ஏமாற்றம், கவலை, பதற்றம், அச்சம் முதலியவற்றால் மனவிறுக்கம் கொண்டு, அமைதி தேடியே, மக்கள் கோயிலுக்கு வருகின்றனர். அவர்களுக்கு, ஆசையற்ற, தூய மனமுடைய, அன்பு நிறைந்த அர்ச்சகர் "செம்மையால் தணிந்த சிந்தை வேதியர்" நடத்தும் வழிபாடு, உண்மையிலேயே அமைதிதரும். அவர்களின் ஆளுமையே ஆறுதல் அளிக்கும்.

மக்கட் சமுதாயமும் மன்னுயிர்கள் பிறவும் நலம்பெற வாழவேண்டும்; அவர்கட்கு இறைவனருள் பெருகவேண்டும் என்று இவ்வந்தணர்கள் வழிபாடு (பரார்த்த பூசை) செய்ததோடு, தாமும்

பிறரிடமும் பிற உயிர்களிடமும் கருணையோடு வாழ்ந்தனர்.

சிவநெறியைப் பரப்பும் வகையிலும், ஆசையற்ற எளிய வாழ்வை மேற்கொள்ளும் வகையிலும், 'அன்பே சிவம்' என்னும் உண்மையை எடுத்துக்காட்டும் வகையிலும் அவர்கள் வாழ்வு, சமுதாயத்தின் பிற பகுதியினர்க்கு ஒரு நல்ல முன்மாதிரியாக விளங்கியது. சைவம் என்பதை அவர்கள் வாய்ச்சொல்லால் சொல்லி அமையவில்லை; வாழ்ந்து காட்டினர்.

"உறுவது நீற்றின் செல்வம் எனக்கொளும் உள்ளம் மிக்கார்,
பெறுவது சிவன்பால் அன்பாம் பேறுஎனப் பெருகி வாழ்ந்தார்

இந்த வாழ்க்கை நோக்கு - மனநிலை அவர்களுக்கு எவ்வாறு வந்தது என்ற ஆய்வுதான்

"செம்மையால் தணிந்த சிந்தை" என்னும் கணிப்பு.

உண்மையை அறியும் அறிவே வாழ்க்கை நோக்கை அமைத்துத் தருவது. செம்மை என்னும் சொல்லாட்சி, "சிவன் எனும் ஓசை யல்லது அறையோ உலகில் திருநின்ற செம்மையுளதே?" எனத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் (4 ஆம் திரு.பொது) காணப்படுகின்றது. நம்பியாரூரர், "திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரையன்" எனத் திருத்தொண்டத் தொகையில் கூறினார். 'ஆன்மா தவத்தால் பாவங்களினின்று விடுபட்டுத் தூயதாகுதலே அருந்நிலை யடைதலாகிய வீடுபேறு' என்னும் சமண்சமயக் கொள்கைக்கு மாறாகத் திருநாவுக்கரசர் 'உண்மைப்பொருளை உணர்தலாகிய ஞானமே வீடுபேறு அடையும்வழி. சரியை, கிரியை, யோகம் என்னும் தவத்தால் அந்த ஞானத்தைப் பெறலாம் என்ற கொள்கையைக் கொண்டிருந்தார் என்பது இத்திருத்தொண்டத் தொகையடியின் கருத்து என்பதை நாவுக்கரசரின் மேற்குறிப் பிட்ட தேவார அடியினால் உணரலாம். ஆகவே 'செம்மை' என்ற சொல் உண்மைப்பொருள் என்ற பொருளுடையது. அதுவே பரம்பொருள், அது உருவமா? உருவமற்றதா? சிவநெறி பரம்பொருளை உருவம், அருவம், அருவுருவம் இம்மூன்றும் கடந்த இயற்கைநிலை (நானேயாய் உள்ள நிலை; சொரூபம்) என்னும் நான்கு நிலைகளிலும் கண்டது சேக்கிழார் இதனை விளக்கி, தில்லைவாழ் அந்தணர் புராணத் தொடக்கத்தில்,

"கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புற நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி"

என்று பாடுகின்றார். மேலான உண்மைப் பொருள் பரம்பொருள். அது சிவநெறியில் 'சிவ' என்னும் மந்திரக் குறியீட்டினால் உணர்த்தப் பெறுகின்றது. கற்பனை எதனாலும் தொடமுடியாத இயற்கைநிலை அது. அப்பொருள் வேதாந்தத்தையும் கடந்த ஞானவெளியில் திகழ்வது. அந்த ஞானவெளியின் அடையாளம் திருச்சிற்றம்பலம். உண்மைப் பொருள், தன் கருணையால் அருளுருவம் (தடத்தம்) கொண்டு கூத்தப்பெருமானாய்த் திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் புரிகின்றான் - என்பது இப்பாடலின் பொருள்.

இதனை யடுத்தே, சேக்கிழார் "(இந்) நிருத்தனுக்குரிய தொண்டாம் பேற்றினார், பேணி வாழும் ஆற்றினார்" எனத் தில்லை வாழந்தணரைக் கூறுதலான், அவர்கள் கூத்தப்பெருமானை நாளும் வழிபடும் தவத்தினால் உண்மைப் பொருளை - பதிஞானத்தை - திருவருளை - அவனே உள்நின்று உணர்த்தப் பெற்றனர் என அறியலாம். சைவ சித்தாந்தம் இந்நிலையைச் 'சத்தி நிபாதம்' (அருள் பதிதல்) என வழங்கும். உண்மையை உணரும் அந்த ஞானமே அவர்களது ஆசையற்ற தன்மைக்கும் மனத்தூய்மைக்கும் காரணம். இதனைக் குறிப்பிடவே சேக்கிழார், "செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வ வேதியர்கள்" என்றார். உலகியலைச் சாராமல் உண்மை ஞானமாகிய திருவருளுணர்வால் சிவத்தைச் சார்ந்தமையின் "தெய்வ வேதியர்கள்" என்று அடைமொழி புணர்த்தார். அவர்களின் ஆன்ம வீரம் உலகியல் ஆசைகளை வென்று, மெய்யுணர்வாகிய திருவருளால் மனம் கனிந்து அடங்கியமையே ஆகும். மனத்தை வெற்றி கொண்டமையே ஆகும். இது பெருவெற்றியன்றோ?

மற்றும் ஓரடியாரின் ஆன்மவீரம் வேறு ஒரு வகையாக வெளிப்படுதலை அடுத்துவரும் வரலாறு காட்டுகின்றது. பெண்ணாசையை வெல்வது அரிதினும் அரிது. வளமை பொங்கும் இளமையில் அதனை வெல்வது வியப்பினும் வியப்பு. திருநீலகண்டர்

எனச் சிறப்புப்பெயர் பெற்ற ஒரு மட்பாண்டத் தொழிலாளி மனைவியுடன் வாழ்ந்துகொண்டே இளமை தொடங்கி, முதுமைகாறும் இல்லறத்துறவியாக இருந்தார். இறையன்பு நடத்திக்காட்டிய அதிசயம் இது.

சிற்றின்ப விருப்ப மிகுதியால் பரத்தையைத் தோய்ந்து வந்த அவரை மனச்செம்மையும் மான உணர்ச்சியும் மிக்க மனைவியார், நல்வழிப்படுத்த மேற்கொண்ட செயல் அவரது வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது.

மனைவியார் கைக்கொண்ட செயல் மிகக் கடுமையானதுதான். மெழுகுவர்த்திதான் எரிந்துகொண்டே பிறருக்கு ஒளி வழங்கும். அதுபோல இளமையும் திருமகள் போன்ற அழகும், கற்பு மாண்பும் உடைய அந்த அம்மையார், தம் மனத்தைக் கடுமையானதொரு வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டுதான் கணவனாரை நல்வழிப்படுத்த முனைந்தார்.

கிணற்றில் வாளி விழுந்துவிட்டால், அதைப் போலவே மூழ்கும் தன்மையுடைய பாதாளக்கரண்டியைக் கொண்டுதான் அதை எடுக்கிறோம். அதைப்போல, திருநீலகண்டர் காமத்தில் ஆழ்ந்தாரெனின், அதனினும் அவர் மிகுதியாக ஆழ்ந்துபோகும் இறையன்பைக் கொண்டே அவரது சிற்றின்ப விருப்பத்தைத் துடைத்தெறிய இயலும் என்று உணர்ந்த அம்மையார் அந்த இறையன்பை ஒரு வார்த்தை மூலம் சக்தியூட்டிக் கிளர்ந்தெழச் செய்தார்.

அந்த வார்த்தை என்ன? சிவபெருமானின் திருப்பெயர்களில் இம்மட்பாண்டத் தொழிலாளருக்கு மிகவும் விருப்பமான பெயர் மனத்தை உருகவைக்கும் பெயர் - திருநீலகண்டர் என்பதாகும். பெருமானது செவ்வண்ணத் திருமேனியில் ஈடுபட்டவர் அவர். அப்பெருமான் உயிர்களையெல்லாம் காப்பதற்காக ஆலகால நஞ்சைத் தாமே எடுத்து உண்டு, அந்நஞ்சு தம் திருமேனியின் முழு நிறத்தையும் சிதைக்காத வண்ணம் அதைத்தம் கழுத்தளவில் நிறுத்திக் கொண்டார். அதனால் அந்த இடம் மட்டும் கருமையாக அவர் பெயரும் 'திருநீலகண்டர்' என ஆகியது. பெருமானின் திருமேனிச் செம்மையையும் பேரருளையும் ஒருங்கே நினைத்த

இத்தொழிலாளர் அன்பால் உருகித் திருநீலகண்டம் என்று அடிக்கடி சொல்லலானார். அதுபற்றி அவருக்குத் திருநீலகண்டர் என்ற சிறப்புப் பெயர் அமைந்தது.

திருவருளைச் சார்ந்து வாழவேண்டும் என்ற அறிவும், திருநீலகண்டத்தின் மீது அன்பும் அவரது ஆழ்மனத்தில் பதிவுகளாக இருந்தன. அவரை நோக்கி அம்மையார், "எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என்று ஆணை வைத்தார். இதைச் சற்றும் எதிர்பாராத தொண்டருக்கு, இந்த வார்த்தை மின்சாரம் பாய்ந்தது போல், 'திருவருட் சார்வு' என்ற அவரது ஆழ்மனப் பதிவை ஒரு பேருணர்வாய் மாற்றியது. வெறும் அறிதல், (Mere Knowledge) செயலுக்கு உரிய தீர்மானமாக வைராக்கியமாக மலர்ந்தது.

திருநீலகண்டத்தின் மீது கொண்ட அன்பே இந்த மாற்றத்தைச் செய்தது! அதனால் அவர் மனத்தின் பெருமிதம் கிளர்ந்தெழுந்தது. காமப்புன்மை எரிந்து சாம்பலாயிற்று. கணப்பொழுதில் நிகழ்ந்த இம்மாற்றத்தைச் சுட்டிக்காட்டச் சேக்கிழார் இத்தொண்டரை "ஆணைகேட்ட பெரியவர்" என்றார். சற்றுமுன் அவர் பரத்தையைத் தோய்ந்து மீண்டபோது, சேக்கிழார் "இன்பத்துறையில் எளியரானார்" என்று கூறியதோடு உறழ்ந்துநோக்கின், தொண்டரது மனப்பக்குவம் எத்துணை உயர்ந்துவிட்டது என்பதை அறியலாம். ஆணையின்படி முதுமைவரை வாழ்ந்தார்.

சிவயோகியாரின் திருவோட்டினைக் களவுகொண்டார் என்ற வீண்பழி சுமத்தப்பட்ட போதும், மனைவியாரைத் தொட்டுக் கொண்டு நீரில் மூழ்கிக் களவிலாமையை அவர் மெய்ப்பிக்க இசையவில்லை. 'மனைவியைத் தீண்டுவதில்லை' என அத்துணை ஆண்டுகள் மறைத்து வைத்த செய்தியைக்கூறி வல்லவாறு மெய்ப்பித்தார்.

மூங்கிற்கழியின் இரண்டு முனைகளையும் மனைவியாரும் தாமுமாகப் பற்றிக்கொண்டு நீரில் முழ்கினார்.

காமத்தால் பொங்கிய திருநீலகண்டரின் சிந்தை ஆணை காக்க வேண்டும் என்ற செம்மையால் - உண்மையால் - தணிந்தது. களவு செய்தார் என்று வீண்பழி சுமத்தப்பட்டபோதும் அவரது

அமைதியுள்ளம் பொங்கியெழவில்லை. அப்பொழுதும் ஆணையைக் காப்பதற்குரிய உபாயத்தையே கண்டறிந்தது. ஆதலால் செம்மையால் தணிந்த சிந்தை தெய்வ வேதியரை அடுத்து இவர் கூறப்பட்டார்.

சைவ சமயம் சாதிகளைக் கடந்தது என்பதும் மனப்பக்குவம் பற்றியே அடியார்களைப் போற்றியது என்பதும் இவ்விரண்டு வரலாறுகளையும் அடுத்தடுத்துக் கூறியமையால் அறியலாம் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன், திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்" என்பன நம்பி ஆரூரர் திருத்தொண்டத் தொகையில் அடுத்தடுத்துக் கூறும் தொடர்களாகும். அந்தணரையும் குயவரையும் சமநிலையில் போற்றும் 'சமய - சமுதாயச் சமத்துவம்' இது (Religio - Social Equality)

அடுத்துப் போற்றப்பெறும் திருத்தொண்டர் வணிகர். சிவனடியார் யாது வேண்டினும் இல்லையென்று மறுக்காமல் வழங்குதலைத் தொண்டாக மேற்கொண்டமையால், தாம் சிலசமயம் உலக நடைமுறைக்கு மாறாக நடந்துகொள்ள நேர்ந்ததையும் அவர் பொருட்படுத்தவில்லை. எத்தகைய துன்பத்தையும் இழப்பையும் இயல்பாக ஏற்றுக்கொண்டார். அதுபற்றி "இயற்பகை" என்றே அவர்க்குப் பெயர் உண்டாயிற்று.

இவ்வாறு எதையும் கொடுத்தல் எளிதா? அதற்கு எப்பொருளையும் தமக்கு எனக்கருதாத 'பற்றின்மை' வரவேண்டும். அது அவர்க்கு எவ்வாறு வந்தது?

"மிக்கசீ ரடியார்கள் யார் எனினும்
வேண்டுவ யாவையும் இல்லைஎன் னாதே
இக்க டற்படி நிகழமுன் கொடுக்கும்
இயல்பின் நின்றவர் உலகியற் பகையாம்"

என்று சேக்கிழார், மக்கள் வழங்கிய பெயருக்கு 'உலகியல்' என அடைமொழி சேர்த்து இத்திருத்தொண்டர் உலகநடப்புக்கு மாறானவரேயன்றி, அதற்கு மறுதலையான திருவருளுக்கு மாறானவர் அல்லர் என எதிர்மறை எச்சத்தால் பெறவைத்தார். அதுகொண்டு இயற்பகையாரின் சிந்தனை திருவருளில் நிலவியது என அறியலாம்.

திருவருளுணர்வு அவருக்கு எவ்வாறு தோன்றியது என்பதையும் மறவாது கூறுகிறார் சேக்கிழார். சிவபெருமானிடம் கொண்ட மெய்யன்பு, அப்பெருமானையே சார்ந்துநிற்கும் மெய்யடிமைப் பண்பை - அவர் உள்ளம் திருவருளால் நிறைந்த பான்மையைப் பெற்றுத்தந்தது என்னும் கருத்தமைய,

"ஆறு சூடிய ஐயர் மெய் யடிமை
அளவி லாததோர் உளம் நிறை அருளால்

என்று பாடுகின்றார். இயற்பகையார் தாம் அடியார்பணி செய்தமை, தம்மிடம் திருவருள் வைத்த குறிப்பு என்றும், தம்மிடம் குவிந்த செல்வமெல்லாம் அப்பணியின் பயனே என்றும் கருதினார். அவர், 'பணி செய்கிறோம் என்ற தன்முனைப்பு' இன்றி அப்பணியினைச் செய்தார் என்பதை,

"அவர் (அடியார்கள்) ஏவின செய்யும் பெருமையே எனப் பேணி வாழ்ந்தார்" எனச் சேக்கிழார் கூறுவதால் அறியலாம்.

அவரது இவ்வாய்மை மாறாக் கொள்கைக்கு ஒரு சோதனை வந்தது. அது அவரது திண்ணிய நெஞ்சுரத்துக்கு மட்டுமன்றி, அவர் மனைவியின் திண்ணிய கற்பிற்கும் சோதனையாக வந்தது. ஒருபுறம் திருநீற்றுப் பொலிவும், ஒருபுறம் காமுகத் தோற்றமுமாக ஒருநாள் வந்த ஓர் அடியார். "நும்பால் ஒன்று வேண்டி வந்தேன்" எனக் கூறியபோது, அவர்க்குப் பணிசெய்ய வாய்த்தமைக்கு மகிழ்ந்தார். அவ் அடியார், "காதல் உன் மனைவியை வேண்டிவந்தது இங்கு" என, எங்கும் இல்லாத வழக்கமாகத் துணிந்து கூறியபோது, இயற்பகை தீயை மிதித்தாற் போல் வெகுண்டெழவில்லை. அதுதான் இயற்கை. ஆனால் அதற்கு மாறாக, முன்னைக் காட்டிலும் மிகுதியாக மகிழ்ந்தார்.

தம் மனைவியை அடியாருடன் அனுப்ப இசைந்தார். இது உலகியலுக்கு மாறானது. மட்டுமன்றி, வியப்பையும் தருகின்றது. அவர் திருவருளில் நிலவிய சிந்தையர் ஆதலின், மனைவியைப் பிறர்க்கு அளித்தல் மனையறத்திற்கு மாறுபட்டதாயினும், "திருவருள் இருந்தவாறு இது" என அச்செயலுக்கு இசைந்து, அடியார் தம்மிடம் இல்லாததை வேண்டாமல், உள்ளதை வேண்டியமைக்காக - அவர் வேண்டியது கொடுக்கவியலாத பொருளாயினும் திருவருளால் தம்

மனம் அதைக் கொடுக்க இசைந்தமைக்காக மிகவும் மகிழ்ந்தார். இம் மகிழ்ச்சி முன்னையினும் மிக்கது என்பதை உணர்த்துவது, சேக்கிழாரின், "இது எனக்கு முன்புள்ளதே வேண்டி எம்பிரான் செய்த பேறு எனக்கு" என்னும் தொடர். இது இரண்டு வகைப் பொருளைச் சிலேடையால் உணர்த்தும். ஒன்று, மேலே கூறப்பட்டது. ஒன்று 'என் மனைவி என் சொல்லை மறுக்க மாட்டாள். நான் அவளுக்கு இடவிருக்கும் பணிக்குத் தன் கற்புக் காரணமாகத் தயங்கினும், என் உரையை மீறாமைக்காக ஏற்றுக்கொள்வாள். இங்ஙனம் அடியார் வேண்டுவது என் திருவருட் பேறு' என்பது.

ஆகவே, தம் மனைவிக்குச் செய்தியைக் கூறியபொழுது, அவளது கணவனுரை மீறாப் பண்பில் நம்பிக்கைவைத்து, "இன்று உனை இம் மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன்" என்றார். கலங்கிவிட்டார் மனைவியார். 'தமது உயிர்த் தலைவராகிய கணவர் இவ்வாறு செய்யத் துணிந்தாரே' என்ற கலக்கம் அது. ஆனால் அது உடனே தெளிந்தது. அதற்குள் 'கணவர் சொல்லை மீறாமல் ஏற்க வேண்டும்' என்பது மட்டும் காரணம் அன்று அக்காரணத்தால் அச்செயல் அத்துணை எளிதாக ஏற்கத்தக்கதும் அன்று. கற்புடைய மகளிர் உயிரைப் பிரியினும் பிரிவரே அன்றிக் கற்பு நெறியினின்றும் வழுவார். ஆதலின் உண்மைக் காரணம் என்ன ?வியக்கத்தக்க வகையில் அவருக்கும் திருவருள் உணர்வு இருந்தது. ஆதலின், "வந்த சிவனடியாரும் தவறு செய்யார் தம் கணவரும் எத்தவற்றுக்கும் துணைநில்லார். நிகழ்வது உடனே காரணம் கூறவியலாத திருவருட் செயல்" என்று தெளிவு பெற்றார். இதைச் சேக்கிழார் அம்மையாரின் விடையில் குறிப்பாகப் புலப்படுத்துகின்றார். அவ்விடை,

"இன்று நீர்எனக்கு அருள்செய்தது இதுவேல்
    என்னுயிர்க்கு ஒருநாத நீர் உரைத்தது
ஒன்றை நான்செயும் அத்தனை யல்லால்
    உரிமைவே றுளதோ எனக்கு?"

என்பது இதில் அம்மையார் தம் கற்புநெறியையும், கணவன் சொல் கடவாப் பண்பையும் ஒருங்கே புலப்படுத்தினார். ஆன்மநாயகன் இறைவன் ஆதலின், அது திருவருள் எனத் தாம்

கருதியதையும் குறிப்பாகக் கூறினார்.

அவர் தம் கணவரிடம் விடைபெற்ற காட்சி 'அருள்இறும்பூது++ விளைப்பதாகும். அந்த மௌன நாடகத்தில் அம்மையாரின் உள்ளம் தம் 'தனிப்பெரும் கணவரை' நினைந்தது. அவர் கைகள் கூப்பின. இயற்பகையாருக்கோ மனைவி என்ற பற்று, முழுதும் விலகிவிட்டது. அம்மையார் திருவருளை உணர்ந்து, சாதாரணப் பெண் ஒருத்தியின் கலக்கத்திலிருந்து தெளிவு பெற்றமைக்காக, அவரை வணங்கத் தோன்றியது. கையெடுத்து வணங்கினார். அங்கே பிரிவுத்துயர் இல்லை. ஏமாற்றம் இல்லை. திருவருளுணர்வே நின்றது.

சுற்றத்தாரோ. இயற்பகை பித்துக்கொண்டதாகவே எண்ணினர். அவன் அறிவு கெட்டு மனைவியை வழங்கினான், ஒருவன் அவளை அழைத்துக்கொண்டு போவதோ? என்று, சிவனடியாரை வழிமறித்தனர். இயற்பகை அவர்களுடன் போரிட்டு வென்றார். அதன் வாயிலாக உறவினர் பற்றை வென்றார்.

இல்லை என்னாமல் வழங்கிய கொடை, திருவருள் உணர்வினால் அவரவது ஆன்ம வீரம் வெளிப்பட ஏதுவாக நின்றது. முனிவர்கள் பல்லாண்டு தவஞ்செய்து பெறுதற்கரிய புலனடக்கத்தை, ஆன்ம வீரத்தால் எய்திய பற்று நீக்கத்தால் பெற்றார். மன்மதனை யோக ஆற்றலால் வென்ற சிவபெருமான் “இயற்பகை முனிவர்” என இவரை அழைத்தாரெனின் அதனினும் இவ்வில்வாழ்வாரது வீரத்திற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

இவ்வீரத்தை விளைத்தது தவமன்று, செம்மையாகிய வாய்மை காத்தமையும், செம்மை என்று அறியப்பட்ட திருவருளை உணர்ந்த பான்மையுமேயாகும். செம்மை என்ற சொல்லுக்கு இவ்விரு பொருளும் உள்ளமை, தில்லை வாழந்தணர் வரலாற்றில் கூறப்பட்டது. “செம்மையால் தணிந்த சிந்தை” காரணமாக, இயற்பகையார் என்ற வணிகர் அந்தணரையும் குயவரையும் அடுத்து இடம்பெறுகிறார்.

# கண்ணகி வழிபாட்டினால் மாரி வந்தது உண்மையா?

பேராசிரியர் கதிர் மகாதேவன்

காவிரி புகும் புகார் எனப்படும் மருத நிலத்தில் பிறந்த கண்ணகிக்கு மிக உயர்ந்த நிலமாக உள்ள மலையும் மலை சார்ந்த சேரநாட்டின்கண் மலை மீது சேரன் செங்குட்டுவன் சிலை எடுத்தான்.

கண்ணகிக்குச் சிலை எடுப்பதற்குரிய கார்ணங்கள் யாவை?

கோடைக் காலத்தில் வெப்பம் தாங்காமல் மலை நாட்டிற்குச் செல்வது வெள்ளையர்களின் வழக்கம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், கோடை வெம்மை தாங்காமல் மலையை நாடித் தேடி அங்குத் தங்கி மலைவளம் கண்டு மகிழ்ந்து இருத்தல் தமிழர்களின் வழிவழி வழக்கமாக இருந்து வந்துள்ளது.

எழில் நல்கும் மலை:

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேரன் செங்குட்டுவன், தன் மனைவி வேண்மாளுடன் மலைவளம் காணச் சென்றான். மலையில் எழும் பல்வேறு வகை ஓசைகளைக் கேட்டு மகிழ்ந்தான். மேலும், மாபெரும் மன்னன் வந்திருக்கின்ற செய்தியைக் கேட்டு மலையில் வாழ்கின்ற குறவர்கள் மலைபடு பொருள்களை எல்லாம் தலைமீது வைத்துக்கொண்டு அவனுக்குப் பரிசாகத் தர வரிசையாக வந்தனர். மலையில் உள்ள பொருட்களை மன்னனுக்கு அடிபணிந்து தந்தனர். சேர மன்னன் அதுவரை கேட்டு அறியாத செய்தி ஒன்றினைக் குறவர்கள் கூறினர். அங்குள்ள ஓர் வேங்கை மரத்தைச் சுட்டிக்காட்டினர். அந்த மரத்தின் அடியில் பெண் ஒருத்தி வந்து நின்றதையும் அவள் ஒரு முலை இழந்து காணப்பட்டதையும் துயரம் குடிகொண்ட வடிவினளாய் நின்றதையும் விவரித்தனர்.

அவள் யார்? யார் பெற்ற பெண்? எதற்காக வந்தாள்? என்பது எங்களுக்குத் தெரியாது என்றனர். எங்கள் குல தெய்வமாகிய வள்ளியைப் போல் இருந்தாள் எனக் கூறினர். அவள் கோபங்கொண்டு ஊழ்வினை காரணமாக மதுரையோடு அரசும் அழிந்துபோக அங்குத் தன் கணவனை இழந்து இங்கு யான்

வந்துள்ளேன் என்று கூறினாள். எங்கள் குலத்தில் இதுவரையில் இப்பெண் போன்றொரு தெய்வத்தை நாங்கள் கண்டதேயில்லை![1] என்றனர் குன்றக்குறவர்.

மழை தரும் கற்பினள்:

மேலும், ஒரு முலை இழந்த அப்பெண் வந்த அளவிலேயே மழை பொழிந்தது! அந்நிகழ்வினைக் கண்ட நாங்கள் வியப்பு மேலிட இப்பெருமழை என்றும் மாறாமல் பெய்து மலை வளம் சுரக்க என வேண்டினோம். மழை வேண்டிச் சிறுகுடியினராகிய நாங்கள் அவளைத் தெய்வம் எனக் கொண்டாடி அவளுக்காகத் தொண்டகம் எனும் இசைக்கருவியை வாசித்தோம்; சிறுபறை அறைந்தோம்; குறிஞ்சிப்பண் பாடினோம்; நறுவாசனை தரும் புகையை எங்கும் பரப்பினோம்; பூசெய் செய்தோம்; எங்கும் மலர் அரும்ப அவளை வழிபட்டோம். மழை பெய்த காரணத்தினால், அருவிகளில் நீர் பொங்கி வழிந்தது; அதில் குதித்து ஆடினோம்[2]... என்றெல்லாம் மன்னனுக்கு உரைத்தனர்.

அப்பொழுது, உடனிருந்த சாத்தனார் அவருக்குத் தெரிந்த வகையில் சிலம்பு காரணமாகக் கண்ணகிக்கு ஏற்பட்ட தீவினையைக் கூறினார். மேலும், கோவலனுக்கு ஏற்பட்ட அவலத்தினை உரைத்தார். கண்ணகி சிலம்பை எறிந்து மன்னன் முன்னால் வழக்காடி அவன் செய்த தவற்றினைச் சுட்டிக்காட்டினாள். பாண்டிய மன்னன் தான் செய்த தவற்றினால், நீதி தவறியதை உணர்ந்து மயங்கி வீழ்ந்து உயிர்துறந்தான். பாண்டியமாதேவியோ தன் உயிர்கொண்டு மன்னன் உயிர் தேடினாள்போல் ஒருங்கு உடன் மாய்ந்தனள். பாண்டியன் இழைத்த கொடுமையைத் தங்களுக்கு உரைப்பதைப் போலத் தன்னாட்டிற்குச் செல்லாமல் இந்நாட்டிற்கு வந்து வானுலகம் சென்றாள் என்று சாத்தனார் கூறினார்.[3]

ஊழ்வினையும் சூழ்வினையும்:

"பாண்டியன் ஊழ்வினையால் நேர்ந்த பிழையினை எம்போன்ற மன்னர் கேட்குமுன்னரே உயிர் விட்டமை போற்றத்தக்கது. வினை காரணமாகக் கோவலனுக்கு இழைத்த கொடுமையை உணர்ந்து பாண்டியன் உயிர் விட்டதனால் பாண்டியனின் வளைந்த செங்கோல் நிமிர்ந்தது! எந்த நாட்டிலும் மழை பெய்யவில்லை என்றால்,

மன்னன்தான் காரணம் என்பார்கள். யாரோ யாரையோ எங்கோ கொல்ல, மன்னன் செங்கோல் ஆட்சி சரியில்லை என்பார்கள். இவ்வாறு எந்த நேரத்திலும் என்ன சொல்லுவார்களோ என்று அஞ்சி அஞ்சி வாழவேண்டிய நிலைமை மன்னர்களுக்கு ஏற்படுகின்றது. எனவே, மன்னர் குடியில் பிறத்தல் துன்பம் அல்லது வேறொன்றும் இல்லை! என்றாலும், நன்மை செய்வதையே எண்ணிச் செயல்படுவது நன்றாகும்"[4] என்று புலவர்க்குச் சேரன் செங்குட்டுவன் கூறினான்.

கண்ணகிக்குக் கோட்டம் அமைத்து விழா எடுத்துச் சாந்தி செய்தால், நாடு மலிய மழைபெய்து வளம் சுரக்கும் என்று சேரன் செங்குட்டுவன் நினைத்திருத்தல் வேண்டும். ஆனால், அதை அம்மன்னன் வெளியே சொல்லவில்லை. ஒரு நாடு என்றால் அங்கு உழுவார் இன்றிப் பாடுபட்டு உழைப்பார் இன்றி, மக்களுக்கு உணவு கிடைத்தல் வேண்டும். இரவும் பகலும் நிலத்தில் உழைத்து அதன் பயனாகக் கிடைக்கும் உணவுப் பொருளை உண்டு வாழ்ந்தார்களேயானால் அது நாடு இல்லை என்று வள்ளுவர் கூறுவார். இதனை,

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளம்தரும் நாடு"

என்பர்.

வேள்வியும் சாந்தியும்:

இன்றைக்கும் பிரமபுத்திரா நதி பாயும் இடங்களில் விதைகளைத் தூவிவிட்டு வந்துவிடுவார்கள். பல மாதங்கள் கழித்து அறுவடை செய்வதற்கு மட்டும் செல்வது வழக்கம். நாடு மலிய மழை பெய்தால் விளைச்சல் சிறப்பாக இருக்கும். இதைத்தான் சிலப்பதிகாரத்தில் உரைபெறு கட்டுரை வருமாறு உரைக்கிறது.

"அன்றுதொட்டு, பாண்டியன் நாடு மழை வறம் கூர்ந்து வறுமை எய்தி, வெப்புநோயும் குருவும் தொடர, கொற்கையில் இருந்த வெற்றிவேல் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று, கள - வேள்வியால் விழவொடு சாந்தி செய்ய, நாடு மலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது."

"அது கேட்டு, கொங்கு இளங்கோசர் தங்கள் நாட்டகத்து,

நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய, மழை தொழில் என்றும் மாறாதாயிற்று."

"அது கேட்டு, கடல் சூழ் இலங்கையில் கயவாகு என்பான் நங்கைக்கு நாள் பலி பீடிகைக்கோட்டம் முந்துறுத்து - ஆங்கு அரந்தை கெடுத்து, வரம் தரும் இவள், என ஆடித் திங்கள் அகவையின், ஆங்கு ஓர் பாடி விழாக் கோள் பல் முறை எடுப்ப, மழை வீற்றிருந்து வளம் பல பெருகி, பிழையா விளையுள் நாடு ஆயிற்று".

"அது கேட்டு, சோழன் பெருங்கிள்ளி கோழி அகத்து, எத்திறத்தானும் வரம் தரும் இவள் ஓர் பத்தினிக் கடவுள் ஆகும் என நங்கைக்குப் பத்தினிக் கோட்டமும் அமைத்து, நித்தல் விழா அணி நிகழ்வித்தோனே"[5].

மேற்குறித்த "உரைபெறு கட்டுரை"யின் வழி பாண்டிய நாட்டிலும் கொங்கு நாட்டிலும் கடல்சூழ் இலங்கை நாட்டிலும் பத்தினிக் கடவுளாம் கண்ணகிக்குக் கோட்டம் அமைத்து வழிபாடு நிகழ்த்த மழைபொழிந்தது என்ற உண்மையை அறிகிறோம். இதில், பாண்டிய நாட்டின்கண் வெற்றிவேல் செழியன் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழாவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழை பெய்தது. நோயும் துன்பமும் நீங்கியது என்று குறிப்பிட்டிருப்பதைச் சிலர் வெற்றிவேல் செழியன்மீது குற்றம் காண்பர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு வாழ்கின்ற நாம் பொற்கொல்லர் ஆயிரவரைக்கொன்று களவேள்வியால் விழாவோடு சாந்தி செய்ய என்ற வரிகளைப் படித்துவிட்டு இச்செயல் நீதியா? நேர்மையா? என்றெல்லாம் நினைக்கிறோம்.

உண்மையிலேயே இக்காலத்தில்கூட, சாந்தி செய்தல் என்று சொன்னால், பரிகாரம் செய்தல் என்பது தான் பொருளாகும். பொற்கொல்லர் ஆயிரவரைக் கொல்லுதல் முறையன்று என்று அக்காலத்தில் வாழ்ந்தவர்களுக்குத் தெரியாதா? அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரையில் தங்கம், வெள்ளி போன்ற பொருட்களுக்கு மதிப்புக் குறையவே இல்லை. பொன்னில் கலப்படம் செய்தாலோ ஏமாற்றினாலோ நாட்டின் பொருளாதாரமே சீரழிந்து போகும். இச்செயல்களைத் தடுக்கப் பொற்கொல்லர் போலப் பொம்மைகள்

செய்து அதை வெற்றிவேல் செழியன் அழித்திருத்தல் வேண்டும் என்று எண்ண வேண்டியுள்ளது.

மூவகைக் காரணங்கள்

திருவள்ளுவர் முதற்கொண்டு பலர் நற்பெண்டிரின் ஆற்றலை மழையோடு தொடர்புபடுத்திக் காட்டியுள்ளனர். பெய்யெனப் பெய்யும் மழை என்று வள்ளுவரும் "வறன் ஓடின் வையகத்து வான் தரும் கற்பினாள் நிறன் ஒடிப்பசப்பு ஊர்தல் உண்டு" என்று பாலைக்கலியும், "என் தோழி அரு மழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே" என்று குறிஞ்சிக் கலியும் கூறுவதைக் காணலாம். இளங்கோவடிகள் புகார்க்காண்டத்திலேயே எடுத்த எடுப்பில் 'மா மழை போற்றதும் "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்' நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளி போல் மேல் நின்று தான் சுரத்தலான்"என்று மழையின் சிறப்பினை உணர்ந்து உணர்த்துகின்றார்.

கண்ணகிக்குச் சிலை எடுத்துக் கோட்டம் அமைத்தால் மழை பொழிந்து நாடு செழிப்படையும்.என்ற நம்பிக்கை அக்காலத்து அனைவரது உள்ளத்திலும் குடிகொண்டிருந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமா வள்ளுவரும் மழையின்றி உலகு சிறக்காது என்ற உண்மையினைப் புலப்படுத்துகின்றார்.

கண்ணகிக்குச் சிலை எடுத்தற்கு காரணங்கள் வருமாறு கூறப்படுகின்றன.

1. கண்ணகிக்குச் சிலை எடுத்தால் மழை பொழியும் என்று நம்பியமை.

2. சேரன் செங்குட்டுவனின் மனைவி கண்ணகியை வழிபடல் வேண்டும் என்று கூறியமை

3. வடநாட்டு வேந்தர்களாகிய கனகனும் விசயனும் தமிழ்நாட்டு மன்னர்களின் வீரத்தை இகழ்ந்து உரைத்து எள்ளி நகையாடியமை.

மேற்குறித்த மூன்று காரணங்களையும் சீர்தூக்கிப் பார்த்தால் இக்காப்பியத்தில் கண்ணகி பெறும் இடத்தின் சிறப்பினைக் கோடிட்டுக் காட்டலாம்.

வஞ்சினமும் வெஞ்சினமும்

வஞ்சிக்காண்டம் முழுவதும் மூன்றாவதாகக் கூறப்பட்ட காரணம் முதலிடம் பெறுகிறது. இமயமலையினின்று சேர நாட்டிற்கு வந்த முனிவர்கள் ஆரிய மன்னராகிய கனகனும் விசயனும் தமிழ்நாட்டு அரசர்களின் வீரத்தை இகழ்ந்து உரைத்தனர் என்பதைச் சேரன் செங்குட்டுவன் தன் ஆற்றலை வெளிப்படுத்தத் தக்க தருணம் கிடைக்காதா? என்று காத்திருந்தவன். கண்ணகிக்குச் சிலை எடுக்க வடநாட்டிற்குச் சென்றால் வடவர் இகழ்ந்த சொல் தவறு என்று உணருமாறு செய்யலாம் என்று சேரன் எண்ணினான்.

இதனைச் சிலப்பதிகாரம்

"இமயத் தாபதர் எமக்கு ஈங்கு உணர்த்திய
அமையா வாழ்க்கை அரைசர் வாய்மொழி
நம்பால் ஒழிகுவது ஆயின், ஆங்கு அஃது
எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியும் தரூஉம்"[8]

எனக் கூறும்.

சேரன் செங்குட்டுவன் வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்றது வரலாற்று உண்மையாகும். இதற்கு முன்னர் சோழன்கரிகாற் பெருவளத்தான், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் முதலியோர் இமயமலையில் வில், புலி, கயல் ஆகிய தமிழ் வேந்தர்களின் சின்னத்தை வடித்து மீண்டனர். இத்தகையோர் வடநாட்டில் மன்னர்களை வெற்றி கொண்டதாகக் கூறப்படும் காலத்து எம்போன்ற மன்னர்கள் இல்லையே என்று கூறிய காவா நாவின் கனகனும் விசயனும் வருந்துமாறு, "தென்தமிழ் ஆற்றல் அறிந்திலர் என்று கூற்றம் கொண்டு இச்சேனை செல்வது" என்று சேரன்செங்குட்டுவன் வடநாடு நோக்கிப் பெரும்படையுடன் சென்றான்.

தமிழ்நாட்டில் காதலுக்கு இலக்கணம் படைத்தது போல அமர் செய்வதற்கும் இலக்கணம் படைத்துள்ளனர். அவ்விலக்கண மரபின் படி, எடுத்துக்காட்டுப் போராக அமையுமாறு வடநாட்டில் தன்னை எதிர்த்த மன்னர்களையெல்லாம் சேரன்செங்குட்டுவன் வென்றான். இவ் அமர் பற்றி இளங்கோவடிகள் கூறும்போது, தேவ அசுர யுத்தம் 18 ஆண்டுகள் நடைபெற்றது. இராம இராவண அமர்க்களம் 18 மாதங்கள் நடைபெற்றது. பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும்

18 நாட்கள் போர் நிகழ்ந்தது. ஆனால், வடவாரிய மன்னர்களை 18 நாழிகையில் கங்கைக் கரையில் அமரிட்டுச் சேரன் செங்குட்டுவன் வென்றான். அவன் வஞ்சினம் கூறியது போலக் கனகன் விசயன் ஆகியோர் தலையில் கண்ணகி சிலை வடிக்கக் கல் எடுத்துக் கங்கையில் நீராட்டிச் சேரசாட்டிற்குக் கொண்டுவந்து கண்ணகிக்குக் கோட்டம் அமைத்து வழிபாடு நிகழ்த்தினான்.

சேரன்செங்குட்டுவன் வடநாட்டிற்குச் செல்ல எண்ணியபொழுது தன் மனைவியிடம் அனுமதி பெற்ற முறை இங்குக் குறிப்பிடத்தக்கது.

பேரியாற்றங்கரையில் மலைவளம் காணச் சென்ற சேரன் செங்குட்டுவன் தன் மனைவி வேண்மாளுடன் தன் தம்பி இளங்கோவடிகளுடனும் சென்றான். குன்றக்குறவர்கள் கண்ணகியை வழிபடுவதாகக் கூறினர். பாண்டியமாதேவி பாண்டியன் இறந்தவுடன் உயிர் துறந்தாள். கண்ணகியோ தன் கணவன் இறந்தவுடன் உயிரை விடாமல் சேர நாட்டிற்கு வந்து கடவுள் ஆயினாள்.

இதனைச் சிலப்பதிகாரம்,

(செங்குட்டுவன் வேண்மாளிடம் வினாவுதல்)

"உயிருடன் சென்ற ஒரு மகள் - தன்னினும்
செயிருடன் வந்த இச்சேயிழை - தன்னினும்
நல்-நுதல்! வியக்கும் நலத்தோர் யார்? என,
மன்னவன் உரைப்ப"

(பெருந்தேவியின் மறுமொழி)

"மா பெருந்தேவி.....
காதலன் துன்பம் காணாது கழிந்த
மாதரோ பெரும் திரு உறுக, வானகத்து;
அத்திறம் நிற்க, நம் அகல் நாடு அடைந்த இப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்" எனக்கூறும்.

இமயத்தில் சேரன்:

சேரன்செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்பிற்கு 2 ஆண்டு 8 மாதங்கள் ஆகியது. இந்தக் கணக்கு மாடலமறையோனால்

கங்கைக் கரையில் சொல்லபட்டது. கங்கைக் கரையிலிருந்து சேரநாடு மீண்டு வருவதற்கு எத்துணைக் காலம் ஆயிற்று என்பதை நாம் ஊகித்துத்தான் அறிய முடியும். சேரன் செங்குட்டுவன் தன் வாழ்நாட்களில் ஐம்பது ஆண்டுகள் போரில் ஈடுபட்டான் எனத் தெரியவருகிறது. பலகாலம் தன் வாழ்நாட்களில் போர்க்களங்களில் காலம் கழித்தான். எனவே, தன் மனைவி வேண்மாளிடம் அனுமதி பெறுவது இன்றியமையாதது ஆகிவிட்டது. தன் மனைவியிடம் வடநாடு நோக்கி இமயமலை வரை செல்வதைக் கூறாமல், சேர நாட்டின் எல்லையை வந்தடைந்த பத்தினிக்கடவுளை வழிபாடு செய்தல் வேண்டும் என்று அவளே ஏற்றுக்கொள்ளுமாறு செய்தான். நூலறி புலவரிடம் கண்ணகி வழிபாட்டினை எவ்வாறு செய்தல் வேண்டும் என்று கேட்பதுபோல அவர்களை நோக்கினான். அப்போது அவர்கள் பொதிய மலையில் கண்ணகியின் உருவத்தை வடிக்க கல் எடுக்கலாம் என்றும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் சேர நாட்டின் சின்னமாக உள்ள வில்லின் இலச்சினையை இமயத்தில் பொறித்துள்ளான். எனவே, இமயத்தில் கல் எடுத்துக்கங்கை ஆற்றில் நீராடிக் கண்ணகிக்குச் சிலை வடிக்கலாம் என்றும் கூறினர். அது கேட்ட செங்குட்டுவன் இங்குள்ள பொதிய மலையில் கல் எடுத்துக் காவிரி ஆற்றில் நீராட்டிக் கண்ணகி உருவத்தைப் படைத்தல் தம் போன்ற வாளுடன் தோன்றிய பெருங்குடிக்குச் சிறப்புத் தரும் செய்கை ஆகாது. எனவே, இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டுவதே புகழ் தரும் செய்தி என்பதைக் கூறினார்.

அவ்வமயம் வில்லவன் கோதை என்ற அமைச்சன் எழுந்து, "மன்னரே! தாங்கள் இமய மலைக்குச் செல்வது கடவுள் எழுத ஓர் கல்லுக்கே ஆதலால் வடதிசையில் உள்ள அனைத்து மன்னர்களுக்கும் தமிழ் நாட்டு வில், கயல், புலி பொறித்த மடலை எழுதித் தாங்கள் அங்குச் செல்வதை அறிவிக்கலாம்" என்று கூறினான். அது கேட்ட அழும்பில்வேள் என்ற அமைச்சன் எழுந்து வடநாட்டு மன்னர்களுக்குத் திருமுகம் எழுதி அனுப்ப வேண்டிய தேவையில்லை! வஞ்சி நாட்டிலேயே வடநாட்டு ஒற்றர்கள் திரிந்து கொண்டிருக்கிறார்கள். தங்கள் படையெ டுப்பைப் பறைசாற்றி இங்கு அறிவித்தாலே வடவாரிய மன்னர்கள் அனைவருக்கும் செய்தி சென்று சேர்ந்துவிடும் என்று கூறினான்.

அதுபோலவே, சேரன் செங்குட்டுவன் பறைசாற்றித் தன் படையெடுப்பை வஞ்சியிலேயே அறிவித்தான். "இமயத்தில் சிலை அமைக்க கல் எடுப்பதே இப்படையெடுப்பின் நோக்கமாதலில் வடநாட்டு மன்னர்கள் தன்னை எதிர் கொண்டு அழைத்துத் திறை கொடுத்து வரவேற்பார்களேயாயின் அமர்க்களத்தைத் தவிர்க்கலாம்; இல்லையெனில், சடுதியில் சந்திக்க நேரிடும்" என்று எச்சரிக்கை வித்தான். அப்பொழுது அங்கு வந்த கணியன் இங்கிருந்து இப்பொழுதே தங்கள் வடநாட்டுப் படையெடுப்பைத் தொடங்கினால் வெற்றி பெறுவது உறுதி. ஏனெனில், இப்பொழுதே வெற்றிக்குரிய நூல்களின் மு(ழுத்)கூர்த்தம் உள்ளது என்று கூறினான். செங்குட்டுவன் தன் அமர்க்களப் பயணத்தை அன்றே தொடங்கினான்.

கங்கையின் தென்கரையில் ஆரிய மன்னர் அமைத்த பாடி வீட்டில் சேரன் தங்கினான். அப்பொழுது அங்கு வந்த மாடலமறையோன் மன்னனை வணங்கிக் கனக விசயரின் முடித்தலையை நெரித்தது மாதவி மடந்தை பாடிய கானல்வரியே என்று கூறினான். சேரன் செங்குட்டுவன், "இங்குள்ள யாவரும் அறியாத ஒரு புதிய செய்தியைச் சொல்லுகிறாயே அது என்ன?" என்று விளங்க உரைக்கும்படி கேட்டுக் கொண்டான்.[9] ஏனென்றால், மதுரையில் கோவலன் கொலையுண்டதையும் கண்ணகி அவலப்பட்டு அல்லலில் சிக்கி உழன்று, 14 நாட்கள் இரவும் பகலுமாக நடந்து வந்து சேரநாட்டில் மலைமீது ஏறி நின்று தெய்வமான செய்தியை மட்டுமே சேரன் செங்குட்டுவன் அறிவான். கோவலனுக்கும் மாதவிக்கும் உள்ள உறவினையும் அதனால், கண்ணகிக்கு ஏற்பட்ட பிரிவினையும் அதைத் தொடர்ந்து அவர்கள் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வினையும் சேரன் அறிய வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

வாழ்க்கையின் தொடக்கமும் முடிவும்:

இதனை இளங்கோவடிகள் விவரிக்கும் முறை கண்ணகியின் அறக்கற்பினைச் சீரிய வகையில் அறிய உதவுகிறது. மங்கல வாழ்த்துப் பாடலில், "ஞாயிறு போற்றுதும்!" என்று கண்ணகியின் கற்பினையும் அவள் வாழ்க்கையில் ஞாயிறுபோல உயர்ந்து, நிலை பெற்றதையும் குறியீட்டு உருவமாக இளங்கோவடிகள் காட்டுகிறார் என்று கூறுவது உண்டு.

சிலப்பதிகாரத்தில் காப்பிய நாயகியாக விளங்குபவர் கண்ணகி எனல் தகும்; கோவலன் கண்ணகிக்குக் கணவன் என்ற பெயரைப் பெறுகிறானே தவிர கோவலன் காப்பியத் தலைவன் இல்லை. இங்கிலாந்து அரச குடும்பத்தில் பேரரசனை மணந்தால் இராணி ஆகலாம். ஆனால், இராணியை மணந்தால் கணவன் அரசனாக முடியாது. அதுபோல உலகமெல்லாம் ஒளிபரப்பி வரும் ஞாயிறு போன்றவள் கண்ணகி. ஞாயிற்றின் ஒளி பெற்றுக் காணப்படும் திங்களைப் போலக் கோவலன் விளங்குகிறான்.

"யாண்டு சில கழிந்தன" என்று கண்ணகிக்குக் கூறுவதின்மூலம் சில ஆண்டுகளில் கண்ணகியைக் கோவலன் பிரிந்தான் என்பதை இளங்கோவடிகள் குறிப்பாகக் கூறுகிறார். கோவலன் திருமணம் முடித்தபொழுது அவள்மீது அளவற்ற அன்பை - "தீராக் காதல் எனச் சிலம்பு கூறுகிறது.

கண்ணகியிடம் "தீராக் காதல்" கொண்ட கோவலன் கலைநாட்டம் காரணமாக மாதவியிடம் "விடுதல் அறியா" விருப்பினன் ஆயினன். கண்ணகியுடன் "யாண்டு சில கழிந்தன" எனில், பல ஆண்டுகள் கோவலன் மாதவியுடன் வாழ்ந்தான் என்று அறியலாம்.

அகப்பொருள் மரபு:

ஆற்று நீரும், ஆழி (கடல்) நீரும், அருவி நீரும் காப்பிய வருணனைக்கு மட்டுமல்லாமல், காப்பிய நோக்கிற்கும் போக்கிற்கும் துணை செய்துள்ளன.

ஆறு:

காவிரி ஆறு கடலொடு கலக்கும் இடம், காவிரி புகும் (பூம்) புகாராயிற்று. ஆறு செல்லும் மருத நிலம் கோவலன் வாழ்வின் செல்நெறியில் மாற்றத்தை ஏற்படுத்தியது எனலாம். கண்ணகியைப் பிரிந்து செல்லும் பின்னணியை ஆற்றுவெளி நாகரிகம் உருவாக்கியுள்ளது. கண்ணகி கணவனுக்காகக் காத்து "இருத்தல்" முல்லைக் கற்பின் முழுமுதல் உரிமைப் பொருளாயிற்று.

கடல்:

"இரங்கல்" பிரிவைக் காப்பியத்துள் நெய்தல் உருவாக்கி உள்ளது. "கானல் வரியில்" தான் கற்பனையில் பாடிய பொருள் உணர்ந்த

மாதவி, கடலைக் கண்டு, நெஞ்சம் பதைத்துப் போகிறாள்.

"பூக் கமழ் கானலில் பொய்ச்சூள் பொறுக்க என்று
மாக் கடல் - தெய்வம்! நின் மலர் அடி வணங்குதும்"[10]

என்று மாதவி நெய்தல் கானலில் நேரப்போகும் இரங்கல் பிரிவை முன் கூட்டியே எண்ணி அலையோடு தொலைந்து போகும் அவல வாழ்க்கையை எண்ணி மயங்குகிறாள்.

அருவி:

குறிஞ்சி நிலத்தில் கண்ணகி, கணவரோடு கூடி வானவர் போற்ற வானகம் பெற்றாள். மழை பொழிந்தது; மலை அருவி நீர் இழிந்து ஓடியது. குறமகளிர்,

................. "இழியும் மலை அருவி ஆடுதுமே

............. .................... .................. ..................... ...........

அஞ்சல் ஓம்பு என்று, நலன் உண்டு நல்காதான்
மஞ்சு சூழ் சோலை. மலை அருவி ஆடுதுமே"[11]

என்று அருவியில் ஆடிப் பாடினர்.

ஆற்று நீரும், ஊற்று நீரும் கடல் நீரும் செழிப்பதற்குக் காரணம் மழை நீராகும். "மழை தரும் கற்பினள் கண்ணகி" ஆம்.

பிற தெய்வம் தொழா அள்:

கண்ணகி தன் தனிமைத் துயரைத் தேவந்தி என்ற தோழியிடம் பகிர்ந்துகொண்டாள். தேவந்தி நாள்தோறும் சாத்தன் கோயிலுக்குச் சென்று கண்ணகியின் துயரத்தைத் தீர்க்குமாறு வழிபாடு செய்து வந்தாள். சாத்தன் அருளால் நீ விரைவில் உன் கணவனைப் பெறுவாயாக! என்று வாழ்த்தினாள்.

ஆனால், அதைக் கேட்ட கண்ணகி, "நினது வாழ்த்தினால், ஒருக்கால் என் கணவரைப் பெறக்கூடும். ஆயினும், நான் கண்ட கனவு என்னை வாட்டி வதைக்கிறது; நானும் என் கணவரும் எங்கோ ஒரு பெரிய நகரத்திற்குப் போனது போலவும், அவ்வூரில் படாதபழி ஒன்று எங்கள் மீது சுமத்தியதுபோலவும் கனவு கண்டேன். தோழி!..... என் கணவருக்கு உற்ற தீங்கைக் கேட்டுக் கொதித்தெழுந்து அரசனிடம் முறையிட்டேன். அதனால், அந்த நாட்டு அரசன் மாண்டான். அந்த ஊருக்குக் கேடு நேர்ந்தது. பிறகு நான் பெற்ற

உயர்நிலையும் என் கணவனுடன் இணைந்த நல்வாழ்வினையும் நீ அறிந்தால் நகைப்பு உண்டாகும்" என்று கண்ணகி கூறினாள்.

கண்ணகி = மாரி:

அதற்குத் தேவந்தி கண்ணகியை நோக்கி, "தோழியே! நினது கணவரால் வெறுக்கப்பட்டவள் இல்லை! நின்னை மறந்து அவர் வாழ்கிறார். உன்னை வெறுத்துப் பிரியவில்லை! காவிரி ஆறு கடலுடன் கலக்கும் இடத்தில் நெய்தலங் கானலில் சோமகுண்டம் சூரிய குண்டம் என்னும் துறைகள் உள்ளன. அவற்றில் நீ மூழ்கிக் காமன் கோயிலில் தொழவேண்டும். அவ்வாறு செய்பவர்கள் இம்மையில் கணவரைப் பிரியாமல் இனிதே இல்லறத்தில் வாழ்வார்கள். மறுமையிலும் பிரியா வாழ்க்கையைப் பெறுவார்கள். நாம் இருவரும் சேர்ந்து ஒருநாள் அங்கேபோய் அந்தத் துறையில் நீராடி வருவோம் என்றாள்.

தேவந்தியின் சொல்லைக் கேட்ட கண்ணகி, கணவனை அன்றிப் பிற தெய்வத்தைத் தொழுவது சிறப்புடைய செய்கை அன்று, இவ்விடத்தில் இளங்கோவடிகள் திருவள்ளுவரைக் குறிப்பாக நினைவு கூர்ந்தார்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

கண்ணகியின் குறிக்கோளுடைய வாழ்க்கை பெரிதும் போற்றத்தக்கது. சேர நாட்டில் மலைமீது கண்ணகி ஏறி நின்றதும் மழை பொழிந்ததைக் கண்ட குன்றக்குறவர்கள் கண்ணகியை வழிபாடு செய்தால், மழைபொழியும் என்ற நம்பிக்கையை அக்காலத்தில் உருவாக்கினர். எங்கெங்குக் கண்ணகி கோயில் எடுக்கப்பட்டதோ அங்கங்கு மழை பெய்தது என்பதை அறிகிறோம்.

பத்தினிக் கடவுளாம் கண்ணகியின் பெயர் மாறி, மாரி என்றும் காளி என்றும் அழைக்கப்பட்டாள். கண்ணகியின் உருவச்சிலையை மதுரையில் செல்லத்தம்மன் கோயிலில் இன்றும் காணலாம். சிலை எடுப்பதற்கு வெளிப்படையாகக் கூறிய காரணங்களைவிடக் குறிப்பாற் சுட்டிய காரணம் வழிவழி பத்தினிக் கடவுள் வழிபாட்டால் தெளிவாகிறது.

## குறிப்புகள்

1. சிலம்பு, வஞ்சிக்காண்டம், குன்றக்குரவை 5-10 வரிகள்
2. சிலம்பு, வஞ்சிக்காண்டம், குன்றக்குரவை, "கண்ணகி வந்த அளவிலே மழை" - அரும்பதவுரை
3. சிலம்பு, வஞ்சிக்காண்டம், குன்றக்குரவை, "கண்ணகி வந்த அளவிலே மழை" - காட்சிகாதை, 64 - 90
4. சிலம்பு, வஞ்சிக்காண்டம், குன்றக்குரவை, "கண்ணகி வந்த அளவிலே மழை" - காட்சிகாதை, 99-105
5. சிலம்பு, "உரைபெறு கட்டுரை"
6. பாலைக் கலி, வரிகள் 16: 20-21
7. *குறிஞ்சிக் கலி, வரிகள் 3: 5-6*
8. சிலம்பு, கால்கோள் காதை
9. சிலம்பு, நீர்படைக் காதை 48-51
10. சிலம்பு, கானல்வரி 48-50
11. சிலம்பு, குன்றக்குரவை 25-28

## *திருப்பெருந்துறைப்புராண அரங்கேற்றம்*

மார்கழி மாதம் திருவாதிரைத்திருநாள் நெருங்கியது. திருவாதிரைத்தரிசனசத்துக்குத் திருப்பெருந்துறைக்குச்சென்றுபுராண *அரங்கேற்றத்தை முடித்துக்கொண்டு* திரும்பலாமென்று என் ஆசிரியர் நிச்சயம் செய்தார். எல்லோரிடமும் விடை பெற்று-அவர் 1873 டிசம்பர் புறப்பட்டார். மாயூரத்திலிருந்து சவேரிநாத பிள்ளை எங்களுடன் வந்தார். வேறு சில மாணாக்கர்களும் வந்தார்கள். சுப்பிரமணிய தேசிகர் மடத்துப் பிரதிநிதியாகப் பழநிக் குமாரத் தம்பிரானென்பவரை அனுப்பினார்.

### *புறப்பாடு*

எல்லோரும் சேர்ந்து புறப்பட்டோம். திருவிடைமருதூர் சென்று அங்கே தங்கி அப்பால் கும்பகோணம்,தஞ்சாவூர்,பட்டுக்கோட்டை வழியாகத் திருப்பெருந்துறையை அடைந்தோம். நாங்கள் போய்ச்சேர்ந்தபோது எங்களுக்கு முன்னரே பல வித்துவான்களும் சிவபக்திச் செல்வர்களும் அங்கே வந்து தங்கியிருப்பதைப் பார்த்தோம். தேவகோட்டையிலிருந்து வன்றொண்டச்செட்டியாரும், வேம்பத்தூரிலிருந்து சிலேடைப்புலி பிச்சுவையரும், சிங்கவனத்திலிருந்து சுப்புபாரதி என்பவரும் மணல்மேற்குடியிலிருந்து கிருஷ்ணையரென்பவரும் வந்திருந்தார்கள். *பிள்ளையவர்களுடைய வரவு எல்லோருக்கும் மகிழ்ச்சியை உண்டாக்கியது.* கோயிலார் மேளதாளத்துடன் வந்து அக்கவிஞர் பெருமானைக்கண்டு பிரசாதமளித்துத் தரிசனத்துக்கு அழைத்துச் சென்றனர். ஆலயத்தில் சுப்பிரமணித் தம்பிரான் அவரை வரவேற்றார். அன்று மாணிக்கவாசகர் மந்திரிக் கோலங்கொண்டு எழுந்தருளியுருந்தார்.

*உவேசாஎன்சரிதம்*

# அ.சீனிவாசராகவன் - வெள்ளைப்பறவை ஒரு இலக்கிய நயம் பாராட்டுதல்

கி.நாச்சிமுத்து

திரு.அ.சீ.ரா. என்று அன்புடன் தமிழ் உலகம் அழைக்கும் திரு.அ.சீனிவாசராகவன் (1905-1975 பிறப்பு தஞ்சாவூர்) சிறந்த இலக்கியச் சுவைஞர். தமிழிலும் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் பெரும் புலமை படைத்தவர். ஆங்கிலப் பேராசிரியராக விளங்கிய அவர்கள் தமிழில் ஆற்றிய சொற்பொழிவுகள் பெரும் புகழ் படைத்தவை. சொற்பொழிவாளர் என்பதற்கு மேலே அவர் சிறந்த இலக்கியத் திறனாய்வாளர், கவிஞர் கட்டுரையாசிரியர். தன்னுடைய வெள்ளைப் பறவை என்ற கவிதைத் தொகுப்பிற்கு அவர் சாகித்திய அகாதமிப் பரிசு (1969)பெற்றவர்.

அவர் கட்டுரைத் தொகுப்புகள் மேல்காற்று (1945) இலக்கிய மலர்கள் (1964) காவிய அரங்கில் (1956) போன்றவை. அவன் அமரன் (1942) நிழல் (1945) உதய கன்னி (1967) மகிழ மரம் போன்றவை நாடகங்கள் ஆகும். கல்கி இதழில் வெளிவந்த குருதேவர் குரல் - கவியரசர் கண்ட கவிதை (1964) தாகூர் கவிதை மொழி பெயர்ப்பும் விளக்கமும் ஆகும். தாரு தத் என்பது வங்க ஆங்கிலக் கவிஞர் கவிதை மொழிபெயர்ப்பு. The Voice of the Poet, Leaves from Kamban போன்றவை ஆங்கில நூல்கள் முதலில் சொன்ன கட்டுரைத் தொகுப்பு மூன்றும் இருமொழி இலக்கிய இன்பத்தை வெளியிடுகின்றன. இவற்றிலெல்லாம் நல்ல ஆங்கிலக் கவிதைகளை நல்ல தமிழில் அழகுற மொழி பெயர்த்துத் தமிழிலுள்ள ஒப்புமைகளைச் சுட்டி இலக்கிய இன்பம் தருகிறார். கம்பன் பாடும் சாளரத்தினும் பூத்த தாமரைகள் என்பது எப்படிக் காளிதாசனிலும் காணப்படுகிறது என்று காட்டும்போது நம் இலக்கியவானம் விரிவு பெறுகிறது. அந்தக் காலத்தில் நம் தமிழ்ப்புலவர்கள் பலரும் வடமொழி கற்றிருந்ததால் வடமொழிக்கருத்துக்கள் பல தமிழிலும் வந்து அணிசேர்த்துள்ளன.

தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா இன்று
தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா (12)

என்று உமாபதி சிவாச்சாரியார் சிவப்பிரகாச அவையடக்கத்தில்

பாடுகின்ற கருத்து காளிதாசரின் மாளவிகாக்கினி மித்திரத்தில் சூத்திரதாரன் கூற்றாகக் காணப்படுவதைக் கண்டுபிடிக்கும்போது நம் அனுபவக் களம் விரிவடைகிறது.

*அசீராவின் வெள்ளைப் பறவை* என்ற கவிதைத் தொகுப்பை அது வெளிவந்த (1967) சுமார் நாற்பது ஆண்டுகட்குப்பின் எடுத்து வாசிக்கும்போது நான் சுவைத்தவைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இந்தக் கவிதைத் தொகுப்பில் மொத்தம் 106 கவிதைகள் காணப்படுகின்றன. இவருடைய கவிதைகள் பாரதி பாரதிதாசன் பின்பற்றிய யாப்பில் நல்ல எளிய மொழி நடையில் காணப்படுகின்றன. இன்றைய புதுக் கவிதைக்கு முந்திய தலைமுறையைச் சேர்ந்தவை இவை. தமிழ்க் கற்பனையியல் மரபின் சுவடுகள் இவை.

பலவிதமான இலக்கிய அனுபவங்களை வெளியிடுகின்றன இவை. காதல், பிறப்பு, இறப்பு பற்றிய தத்துவ விசாரங்கள். இயற்கை, நேரு, காஞ்சி சங்கராச்சாரியார், சீனப் போர், பாரதி, கம்பன், புதுச்சேரி, காரைக்கால் போன்றவை இவர் பாடு பொருள்கள். சில பட்டிமன்றக் கவிதைகளும் காணப்படுகின்றன.

தமிழ் இலக்கிய மரபிலே தோய்ந்த மொழி, எளிய சொல்லாட்சி, நல்ல உவமை உருவக அணிநலம், ஓசை இனிமை படைத்த யாப்பமைதி, கருத்து வளம், உணர்ச்சி வேறுபாடுகளாகிய மெய்ப்பாட்டமைதி ஆகியவை நிறைந்து நிற்கின்றன. இக்கவிதைகளில் ஆங்காங்கே இவர் தேர்ந்துகொள்ளும் நாட்டுப்புற யாப்பமைதிகளும் பாடு பொருளுக்குப் பொருந்த அமைகின்றன. இவையெல்லாம் இவருக்கு இலக்கியச் சிறப்பை ஈட்டித் தருகின்றன எனலாம்.

தொ.மு.சி.ரகுநாதன் முன்னுரை, முதல் வாசகர் குரல் என்ற தலைப்பில் அமைந்து இக்கவிதைகளின் சிறப்பை எடுத்து விளக்குகிறது. கவிதை சொற்களால் எழுதப்படுவது; கருத்துக்களால் அன்று; என்ற பிரெஞ்சு அறிஞர் மல்லார்மே கருத்தை எடுத்துக் காட்டி அவர் கருத்தை சுத்த சுயம்புவான கருத்துமட்டும் ஒன்றைக் கவிதையாக்குவதில்லை. அதனைச் சொல்கின்ற விதம் தான் என்று விளக்கம் செய்து அசீரா கவிதைகளைத் திறனாய்வு செய்துள்ளார்

தொ.மு.சி.

மல்லார்மே கருத்தை எடுத்துக்காட்டித் தமிழ் இலக்கிய வரலாற்றில் செக் அறிஞர் கமில் சுவலபில் திருக்குறளின் முதல் இரண்டு அதிகாரங்களும் கருத்துப் பெட்டகமாக உள்ளன எனினும் இலக்கியச் சிறப்புப் பெறவில்லை என்றெழுதிச் செல்வார். ஆனால் இந்த அழகியல் சிந்தனை நம் அழகியலிலிருந்து மாறுபட்டது என்பது ஒருபுறம் இருக்க மல்லார்மே அளவுகோலில் பார்த்தாலும் குறள் சோடை போகாது.

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். என்னும் (271) குறள்

திருவள்ளுவர் சொல்லவருகிற கருத்தை எவ்வளவு நயம்படக்கூற முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. இன்னும்

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். 200

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு. 739

போன்றவை கருத்துக் கோவைகளாக இருப்பினும் அவற்றைச் சொற்பின்வரு நிலை அமையும்படி அமைப்பதில் வள்ளுவர் காட்டும் இலக்கிய அக்கரை கவனிக்கத்தக்கது. மேலும் இவை அநுவாதம் என்ற முறையில் வற்புறுத்தலாகவும் அமையும். இன்னும் வாக்கிய அமைப்பில் ஆதலால் என்ற இணைப்பை இணைக்கும்போது காரண காரியத் தொடராகவும் அமையும்.

குறளிற் போல அசீரா கவிதைகளில் கருத்தும் உள்ளது. கூறும் முறையும் இலக்கியச் சுவைபட உள்ளது.

நீயும் நானும் (6-7) என்ற கவிதை கடவுளும் மனிதனும் யார் என்பதை அழகாகச் சொல்லுகிறது. இதில் தாகூரின் கீதாஞ்சலியின் சாயலைக் காணமுடியும்.

இமய மலை நீயானால்,
ஏறும் அணு நானல்லவோ?
திமிதக் கடல் நீயானால்
சின்னத்துளி நானல்லவோ?

குழந்தையும் மனிதனும் குழந்தையும் நானும் என்ற கவிதையும் (190-1) குழந்தையின் தெய்வீக இயல்பை மிக அழகாகச் சொல்லுகிறது.

சந்திர மண்டலம் தாவிப் பிடிக்கும்
தந்திரம் சொல்லெனத் தளிர்க்கை நீட்டி
என் முகம் பார்க்கும் குழந்தைநானோ
குன்றிய முடவன் கூனன்.

உயிர்படும் பாடு

பழைய சித்தர் பாடல் நெயியிலே பறவையாகிய உயிர் படும் பாடு இக்கரை, அஞ்சு தலை அரவம், பறைபோன்ற குறியிட்டுச் சொற்களால் பாடப்பட்டுள்ளது படர்ந்தெரிதல் என்ற கவிதை.

ஆற்றுவெள்ளம் கடந்து------- ----- மோனம்
யாரை அழைக்கிறது?
காற்றாய் வரும் கயிறும் - யாரைக்
கட்டி இழுக்கிறது?
அஞ்சு தலை அரவம் - ஆடிய
ஆசைப் புதிர் அடங்கும்
எஞ்சிய ஒன்றகண்டப் - பாழினில்
ஏறும் சதிர் தொடங்கும்
இக்கரை மேட்டை விட்டே - கூடும்
ஏகமறுத் துலையும்
விக்கி விடுதலைக்கோர் - பறவை
வீம்பு பிடித்தலையும்
மூச்சுப் பறை அடங்கும் வேட்டை
மூளும் விலங்கொடுங்கும்
வீச்சில் படர்ந்தெரியும் - திரியின்
மேனி நடுநடுங்கும் (படர்ந்தெரிதல் 192-3)

இது ஒரு நல்ல கவிதை வள்ளுவர் பாடும் உயிர்ப்புள் (338) நினைவுக்கு வராமற் போகாது படிகள் (222-4) என்ற கவிதையிலும் இதே பொருள் வீடுபேறு

வள்ளுவருடைய புக்கில் அமைந்தின்று கொல்லோ (340) என்ற கேள்வி வீடு என்ற அருமையான கவிதையாகக் கவிஞர் கையில்

உருவெடுக்கிறது.

எத்தனை எத்தனையோ - வீடெனக்
 கெத்தனை எத்தனையோ!
அத்தனை வீட்டினுள்ளும் - மாறி
 மாறி அடைந்திருந்தேன்.
தத்தி ஒரு வீட்டை - விட்டுத்
 தாவி மறு வீட்டில்
எத்தனை எத்தனையோ - வீட்டில்
 ஏறி இறங்கி வந்தேன். (196)

வாழ்க்கை

எது வாழ்க்கை (154-5) என்ற கவிதை வாழ்க்கையைக் கண்டு ஓடாமல் அதை எதிரிடுகிற தெம்பைக் கூறும் நம்பிக்கைப் பிரகடனம்.

நிரப்பிலே துயரா? திரிபுரம் எரித்த
தெய்வச் சிரிப்புச் சிரித்துத் துயரின்
நெடுமதிற் பொய்யை நிமிடத்து அழிப்போம்.

பயணம் (158-9) என்ற கவிதையும் இதுபோன்ற உணர்ச்சியை வெளியிடுகிறது. இதில் மேற்கத்தியக் கவிதையின் தாக்கம் இருப்பது போல் தோன்றுகிறது. போரும் புயலும் என்ற கவிதையும் (160-2) இவை இரண்டையும் ஒப்பிட்டு படிக்கவேண்டிய பாடங்களை மனிதன் படிக்கவில்லை என்று ஏங்குகிறது. எல்லாக் கவிஞர்களைப் போலவே இவருக்கும் சிட்டுக்குருவி ஒரு தத்துவத்தைச் சொல்லுகிறது. (சிட்டு (40).

காதல்

காதல் இல்லாமல் தமிழ்க் கவிதையா? கவிஞரும் காதற் பாடல்கள் இயற்றியுள்ளார். காதற் கிறுகிறுப்பில் காதலன் பேசுகிறான் (132-3)

ஏந்து முன் நெற்றியிலே சுட்டியாய்
 ஏறிக் கொலு விருந்தால்
கூந்தல் மழையிருட்டில் - மயிலாய்க்
 கூத்தாடி ஆடேனோ?

காதலிக்கு அணிகளாக ஆகியாவது அவளுடன் நெருக்கமாக இருக்க இயலாத ஏக்கம் இனிய கற்பனையாக உருவெடுத்துள்ளது. இது காதல் வெறிப்பேச்சு.

காதலைப் பற்றிப் பாடும்பொழுது கவிஞர் ஆரவாரமற்ற எளிய மனிதராக மாறிக் கண்ணாத்தாளை நினைக்கிற கண்ணனாக மாறிவிடுகிறார். கண்ணாத்தா என்ற காதல் பாட்டு (138-9) இப்படித் தொடங்குகிறது.

கையிற் பனங்கூடை ஊசலிட தொங்கும்
காதினில் பாம்படம் பூசலிடப்
பையை இடுப்பிலே தொய்யவிட்டு முத்துப்
பல்லால் மயக்குவாள் கண்ணாத்தா

பாடல் நாட்டுப்பாடல் மெட்டில் ஏறுநடைபோடுகிறது.

ஏமாற்றம் போன்றவை அவர் காதல்வாழ்க்கையில் பெற்ற அனுபவத்தைச் சொல்வதாய் அமைகின்றன போலும்,

**இயற்கை**

இயற்கையைப் பாடாத கவிஞர்கள் இல்லை. இயற்கை இடம்பெறாத கவிதைகளும் இல்லை. கடல் பற்றிய வருணனை ஒன்றின் பகுதியைப் பாருங்கள்.

பங்குனி அந்தி அரைத்த செஞ் சந்தனப்
பாயலில் சாய்ந்துவிழும்- - - நீலக்
காயலில் ஓய்ந்துவிழும்
எங்கும் பரந்து கிடந்த உடம்பினை
ஏங்கிச் சுருட்டி விடும் - மயங்கித்
தூங்கிக் குறட்டை விடும். (கடல் 34-35)

இயற்கைப் பெண்ணின் எழில் நலம் கவிஞரை ஆட்கொள்வதைக் குற்றாலத்திலே 97-98 என்ற கவிதையில் நாம் கண்டு மகிழ்கிறோம். குற்றாலம் என்றவுடன் அதன் அழகு மட்டுமல்ல திரிகூடராசப்பரும் மலைக்குற மக்களும் அவர்கள் மொழியும் நாட்டுப்புற மெட்டும் எல்லாம் கவிஞரை ஆட்கொண்டுவிடுகின்றன.

குத்தாலத்து மலையின் மேலொரு
குறுணி மேகம் கொட்டுது,

கோண மூங்கில் ஒடம்பை வளைச்சுக்
கும்மிபாடி வெட்டுது. (குற்றாத்திலே97)

சித்தாத்தங் கரைத் தோப்பில் அந்தச்
சிறுக்கி வந்து பிலுக்குறா
சின்ன முல்லைச் சிரிப்பில் என்தன்
சிந்தை தூக்கிக் குலுக்குறா.

கவிதை வாழ்வு

இரண்டு கவிஞர்களின் (172-5) என்ற கவிதையிலே கவிதை வாழ்க்கைக்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் இடையே உள்ள இடைவெளியை அலசுகிறார் கவிஞர். கவிதையின் அழகியலே வயிற்றியலாக மாறுகிறது. கவிதைக்குக் கவிஞர் வகுக்கும் இலக்கணமும் ஒரு கவிதைத் சூத்திரமாக இப்படி அமைகிறது.

எண்ணத் தேரில் ஏறி உளம்
எங்கும் திரிந்து நாளெல்லாம்
மண்ணில் மனிதர் உறுகின்ற
மறுக்கம் முழுதும் தேர்ந்தறிவு
விண்ணை அளந்து விஞ்சு மெழில்
வியப்பைச் சொல்லில் வடிவாக்கிக்
கண்ணின் முன்னே தருவதுவே
கவிதை என்னும் பெருவிஞ்சை (கவிதை 13)

அக்கரைச் சீமை (103-4) குப்பன் பிள்ளைத்தமிழ் (108-117) போன்றவை வெறும் நகைச்சுவைத் துணுக்குகளாய் நையாண்டிப் போலிகளாய் அமைகின்றன. பல கவிதை முயற்சிகளை மேற்கொண்ட கவிஞர் தன் கவிதை பற்றிக் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்.

படித்தாயிற்றா இன்னுமொரு
பாட்டைக் கேட்க மனமுண்டா?
தொடுத்தேன் உள்ளச் சிதரையெல்லாம்
சுழல விட்டேன் அவ்வளவே
படித்து நீங்கள் பார்த்ததிலே

பரவா இல்லை என்று துளி
எடுத்தச் சொல்ல இடமுண்டா?
இருந்தால் அது போதும், அது போதும், (அதுபோதும் 235)

நாணல் என்ற பெயரில் கவிதை எழுதிய இவர் அதன் வளைந்து கொடுக்கும் இயல்பையும் தன்னுள் கொண்டுவிட்டாரோ? அவையடக்கமாக இதை எடுத்துக் கொண்டு அவர் தமிழக் கவிதைக்குச் சேர்த்த வளத்தைக் கொண்டாடுவோம், வாழ்த்துவோம், ச.து.சு.யோகியின் தமிழ்க் குமரி போன்று இவரது வெள்ளைப்பறவையும் தமிழ்க் கவிதை வானத்தை அழகூட்டுவது.

நூலடைவு

வெள்ளைப் பறவை முதலிய கவிதைகள் அ.சீனிவாசராகவன் (நாணல்) மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயம்புத்தூர். முதற்பதிப்பு 1967 பக்.260, 106 கவிதைகள்.

(அசீரா நூற்றாண்டுவிழாக் கருத்தரங்க சைவப்பிரகாச சபை. திருவனந்தபுரம் 16.11.2004 தலைமையுரை)

பதிப்பாசிரியர்.

பேராசிரியர். இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். இ.கி. இராமசாமி
திரு. சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்
திரு. ந. வாசுகிராசா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆ 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 2341116